செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, ஆனி
சூலை 1973 | பரல் ௧௧

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௧௦-ஞ் ௪௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறள் கூறும் சட்டநெறி

இதை எழுதியவர் சட்டப் பேரறிஞர் மா. சண்முகசுப்பிர மணியம் (பி.ஏ.பி.எல்.) அவர்களாவர். 10-11-1963 இல் "தமிழ் நாடு" ஞாயிறு மலரில் "குறள் கூறும் சட்டநெறி" என்ற தலைப்பில் நீதிமுறை பற்றிய கட்டுரையினை எழுதி வெளியிட்டுள்ளனர். அதனை அவருடைய இசைவு பெற்றுக் கழகச் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 39 பரல் 5 இல் வெளியிடலானேன். தொடர்ந்து அச்சிலம்பின் எஞ்சிய 7 இதழ்களிலும் அவர்கள் 'குறள் கூறும் சட்டநெறி'யினை விளக்கி எழுதி வந்ததோடு 40 ஆவது சிலம்பிலும் தொடர்ந்து 7 கட்டுரைகளை எழுதித் தமிழறிஞர்கள் போற்றிப் படிக்குமாறு செய்தனர். பின்னர் அக் கட்டுரைகளையெல்லாந் தொகுத்து அவர்களிடங் கொடுத்தேன். அவற்றை நூல் வடிவிற்கேற்பத் தலைப்புகள் அமைத்துத் திருத்தியும் புதுக்கியும் தந்தனர். 18×12 செ. மீ. அளவில் 1967 திசம்பர்த் திங்கள் கழகத்தின் 1311 ஆவது வெளியீடாக அந்நூல் அச்சிடப்பெற்று வெளிவந்தது.

இயல்பாக அவர்கள் திருக்குறளின் அறநெறியினைச் சமுதாயச் சட்டநெறி முறைகளோடு ஒப்பிட்டு ஆராய்வதற்கு அவர்கள் முன்பு எழுதிய சட்ட இய (Jurisprudence)லும், தீங்கியல் சட்ட (Law of Torts)மும் வழிகாட்டிற்று என்று

கருதுவதில் தவறில்லை. சட்ட இயலில் 34 திருக்குறட் பாக்களையும், தீங்கியல் சட்டத்தில் 9 திருக்குறட் பாக்களையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்கள். மேலும் சட்டவியலில் பாரதியார் பாடல்கள், புறநானூறு, தாயுமானவர் பாடல்கள் சுக்கிரநீதி, மனுதரும நூல் ஆகியவற்றிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்தாண்டிருப்பது நூலுக்கு விழுப்பம் தருகிறது. தீங்கியல் சட்டத்தில் திருக்குறளை எடுத்தாண்டிருப்பதோடு சங்க இலக்கியங்களுள் மதுரைக் காஞ்சி, புறநானூறு ஆகிய நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருப்பது ஆசிரியரின் சட்ட நூற்புலமையோடியைந்த தமிழ் இலக்கியப் புலமையினையும் விளக்குகின்றது.

ஆசிரியர் எழுதிய "குற்ற இயல் சட்டநூல் (Criminal Law) 1966 ஏப்பிரல் திங்களில் அரசு தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் பதிக்கப்பெற்றுள்ளது. அதன்கண் 27 திருக்குறட் பாக்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. புறநானூறு, பட்டினப்பாலை, தாயுமானவர் பாடல் ஆகிய இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களும் காட்டப்பெற்றுள்ளன.

எனவே, திருக்குறளின் அறநெறி சமுதாயச் சட்ட நெறிகளை விளக்குவதற்கு எத்துணைப் பயன்படுகின்ற தென்பதை ஆசிரியர் நன்கு கண்டறிந்தமையினால் "குறள்கூறும் சட்ட நெறி" என்ற தலைப்பில் நூலொன்று எழுதலாம் என்று அவர்கள் கருதியது போலவே அந்நூல்களைப் படித்த யானும் கருதியதால் "குறள்கூறும் சட்டநெறி" என்ற தலைப்பில் கட்டாயம நூலொன்று எழுதுமாறு விரும்பி வேண்டினேன். தமிழிலும் சட்டத்திலும் பெரும்புலமையும் பட்டமும் பெற்ற பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை, சொல்லின்செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களாயிருந்துங்கூட அவர்கட்கெல்லாம் திருக்குறள் அறநெறிக்கும் சமுதாயச் சட்டநெறிக்குமுள்ள தொடர்பினை அறிந்து நூல் எழுத வேண்டுமென்ற கருத்துத் தோன்றவில்லை. அவ்விழுமிய கருத்துத் திருவாளர் மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கட்கே தோன்றி அழியாப் புகழை அவர்கட்கு ஈட்டித் தந்துளது.

அறிவியற் கருத்துக்கள் சங்க இலக்கியங்களிற் பொதிந்து கிடக்கின்றன என்பதையறிந்த ஆங்கில அறிவியற் புலமையும்

தமிழ் இலக்கியப் புலமையும் பெற்றவர்கள் பலருளரெனினும் புதுவை அறிவியற் பேரறிஞர் பி. எல் சாமி அவர்கள் ஆய்ந்து சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்ற மூன்று நூல்களைத் திறம்பட ஆக்கியமைபோல் வேறெவரும் ஆய்ந்து இயற்ற முனைந்தாரிலர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுவது தவறாகாது.

குறள்கூறும் சட்டநெறி ‘அறம்’ என்பதை முதல் தலைப் பாக நிறுவி, ‘வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நலப் பண்புகள்’ என்பதை 22ஆவது தலைப்பாக அமைத்து 240 பக்கங்களில் வெளியிடப் பெற்றுள்ளது. 65 திருக்குறள் பாக்களும், தொல் காப்பியம், புறநானூறு, அகநானூறு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பழமொழி நானூறு ஆகிய பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களிலிருந்தும், அப்பர் தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைகளிலிருந்தும் பல பாடல்களும் மேற்கோளாக எடுத்தாண்டிருப்பது அவருடைய சட்டநூற் புலமையினையும் தமிழ் இலக்கண இலக்கியப் புலமையினையும் ஒருங்கே காட்டுவதாகும். இறுதியில் 15 பக்கங்களில் ‘‘பொருட் குறிப்பகரவரிசை’’ சேர்க்கப்பெற்றிருப்பது நூல் ஆய்வாளர்க்கு மிக்க பயன் தரும். அதற்கு அணிந்துரை வழங்கியவர் சென்னை உயர் நீதிமன்ற நடுவரும் தமிழ்ப் பேரறிஞருமாகிய உயர்திரு மா. அனந்த நாராயணன், ஐ. சி எஸ். அவர்கள் ஆவர்.

இத்தகு நூலை எழுதினால் பயன் விளைவிக்குமென்று ஆசிரியரும் பதிப்பாளரும் கருதியதுபற்றி ஆசிரியர் எழுதிய முகவுரையிலிருந்து ஒரு பகுதியும், இதன் தனிச் சிறப்பினை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்பமை திரு. மா. அனந்த நாராயணன் (I. C. S.) அவர்கள் வழங்கிய அணிந் துரையினின்றும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் வழங்கிய முன்னுரையி னின்றும் ஒவ்வொரு பகுதியும் இந்நூலைப் பெற்றுப் படிக்க வேண்டுமென்ற அவாவைத் தூண்டும் என்னும் நம்பிக்கை யினால் கீழே தருகின்றேன்.

ஆசிரியர் முகவுரையில் ஒரு பகுதி

‘‘சட்ட நெறிகள் பலவும் அறநெறிகளை ஒட்டி எழுந்தவை. எனவே, அறநெறிகளில் சில சட்ட நெறி களுக்கு அடிப்படையாக அமைகின்றன. இத்தகைய அறநெறிகள் திருக்குறளில் அமைந்துள்ள திறம்பற்றி

விளக்கும் வகையில் விரிந்ததே இந்நூல். சட்ட நெறியின் இதயம் அறநெறிதான் என்ற உண்மையையும், இதன் நெறிகளுள் சில இன்றைய சட்ட நெறிகளாகவும் விளங்கு கின்றன என்பதையும் எடுத்துக்காட்டும் இந்நூல் திருக் குறளின் சிறப்பினை ஒரு புதிய கோணத்திலிருந்து கண்டு துய்ப்பதற்குத் துணைபுரியும் என நம்புகிறேன்.

"இடைவிடாது என்னை ஊக்குவித்து இதை எழுதச் செய்து, சீரிய முறையில் இந்நூலை வெளியிடும் சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சித் தலைவர் உயர்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகுக."

உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி அணிந்துரையில் ஒரு பகுதி :

"குறளுக்கும் சட்ட இயலுக் (Jurisprudence) கும் எவ்வகை உறவுகள் உள்ளன என்று திருக்குறளில் பல ஆண்டுகள் பன்முறை நுணுகிக் கண்ட தமிழாராய்ச்சிப் புலவரை வினவினும், அவர் மறுமொழி கூற இயலாது வாளா நிற்பரெனவே நான் கருதுகின்றேன். ஏனெனில், திருக்குறளை ஒப்பிணையில்லாத அற நூலாகவும், இலக் கியக் களஞ்சியமாகவும், சமூகப் பண்பு (Sociology) நூலா கவும், அரசியல் உண்மை நூலாகவும், பல பட்டைகள் தீட்டப் பெற்ற ஒளி மணியாகவும் காண இயலும். ஆனல், சட்டவியல் (Jurisprudence) உண்மைகளும் அதில்ஆழ்ந்து புதைந்துள்ளன என்பது எளிதில் புலனுகாதவோர் உட் கிடையாம்.

"இது கொண்டு திரு மா. சண்முகசுப்பிரமணியம் இயற்றியுள்ள "குறள் கூறும் சட்ட நெறி" (Concepts of Law in Kural) என்ற இவ்வருமையான நூலைத் திருக் குறளாராய்ச்சியிலும் சட்ட நெறி ஒப்பு முறைகளிலும் (Comparative Law) புதியதொரு நெறிகோலும் போற்றற் குரிய சாதனையாகவே நாம் ஏற்கவேண்டும். இவ்வாறு கூறல் சிறிதும் மிகையாகாது என்பது என் திடமான நம்பிக்கை. தமிழகமும், சட்டவியல் ஆராய்ச்சியினர் குழுவும், நீதிமன்றங்களும், வழக்கறிஞர் தொகுதியும் இந் நூலின் சார்பாகத் திரு சண்முகசுப்பிரமணியம் அவர்க ளுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை."

டாக்டர் மு. வரதராசனார் அளித்த முன்னுரையில் ஒரு பகுதி :

"இதன் ஆசிரியர் பல ஆண்டுகளில் நீதிமன்றங்களில் பயின்ற அறிவுப் பயிற்சியெல்லாம் இன்று திருக்குறளுக்குப் பயன்படுதலை நினைந்து மகிழ்கின்றேன். சட்டத்துறையில் உள்ள பல நூல்களையும் கற்றுத் தெளிந்து திருக்குறளில் உள்ள நுண் கருத்துக்களையும் ஆய்ந்து தேறிய பின்னரே இத்தகைய ஆராய்ச்சியை நல்க முடியும். இந்நூலாசிரியரின் ஊக்கமும் உழைப்பும் இருதுறையிலும் பெற்ற தேர்ச்சியும் இவ்வாறு நல்குவதற்குத் துணை புரிந்தன என்பது தேற்றம்.

"அறநெறி எல்லாம் சட்ட விதிகள் ஆவதில்லை என்பதும், அறக் கொள்கைகளுள் சில மட்டுமே சட்ட விதிகள் ஆகின்றன என்பதும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அறத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

"இந் நூலாசிரியரின் ஆராய்ச்சி சட்டத் துறைக்கும் தெளிவு தருகிறது. திருக்குறளுக்கும் பெருமை தருகிறது. இஃது அறிவுலகம் போற்றுதற்குரிய நன்முயற்சியாகும்."

குறள் கூறும் சட்டநெறி வெளியீட்டு விழா தமிழ்நாடு முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் 31-12-1967இல் உட்லன்சு விடுதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. உயர் நீதிமன்ற நீதிபதி மாண்பமை பி. எஸ். கைலாசம் அவர்கள் 'குறள் கூறும் சட்ட நெறி' என்ற நூலைப்பற்றிப் பாராட்டிப் பேசி ஆசிரியர்க்குப் பொன்னாடை போர்த்தினர். திருவாளர்கள் மீ. ப. சோமு அவர்களும், இராவ்சாகிப் கு. கோதண்டபாணி பிள்ளையவர்களும் நூலின் சிறப்பினை எடுத்து விரித்து விளக்கிப் பேசிப் பாராட்டினர்.

இதுகாறும் அறத்தின் உட்பகுதியாகிய அடிப்படைச் சட்ட நுணுக்கங்களின் ஒப்புமைகளும் திருக்குறளின்கண் உளவென்று குறிப்பிட்டார் ஒருவருமிலர். அடிப்படைச் சட்டநெறிகள் பெரும்பாலும் எல்லா நாட்டிற்கும் எல்லாக் காலத்திற்கும் ஒத்தனவாகவே காணப்படுகின்றன. ஒப்புயர்வில்லாத திருக்குறளிலும் அவ்வொப்புமை காணப்படும் உண்மையினை இந்நூலால் தெள்ளத் தெளிய இனிதுணரலாம். 'எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால் இல்லாத எப்பொருளு மில்லையால்' என **மதுரைத் தமிழ் நாகனார்** பாராட்டி யுரைத்தமை

புனைந்துரையன்று; வாய்மையுரையே யென்பதற்குச் சான்றாகத் திகழ்கின்றது இந்நூல் என்று மகிழ்வோம்.

"திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி" என்ற தலைப்பிற்குத் தலைமணியாக விளங்குகிறது இந்நூல் எனின் அது மிகையாகாது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விருந்த சொல்லின் செல்வர் டாக்டர் சேதுப்பிள்ளையவர்கள் தம்மை ஈன்றெடுத்த அன்னையார் திருவாட்டி சொர்ணம்மாள் பேரில் ரூ. 25,000 சென்னைப் பல்கலைக் கழகத்திலே வழங்கி ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளனர். அவ்வறக்கட்டளையின் சார்பில் யாழ்ப்பாணம் தமிழ்ப் பேரறிஞரும் இலங்கை அமைச்சராக விருந்தவருமான உயர்திரு எஸ். நடேச பிள்ளை 'திருவள்ளுவர் காலம்' பற்றி முதன்முதல் மூன்று நாள்கள் பேசினர். அப்பேச்சு நூல்வடிவில்வெளிவராதுபோனது நந் தவக் குறையேயாகும். தொடர்பாக டாக்டர் பா. நடராசன், டாக்டர் சேவியர் தனிநாயகம், இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளை முதலியோர் பேசி வந்தனர். 18, 19, 20-10-1967இல் உயர்திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் "Concepts of Law in Thirukkural" என்ற தலைப்பில் டாக்டர் மு. வரதராசனுர் தலைமையில் ஆங்கிலத்திலே கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்ப் பேசினர். அப் பேச்சு நூல் வடிவில் மற்ற அறக்கட்டளைச் சொற்பொழிவுத் தொகுதியில் அடங்கியுள்ளது. உயர்நீதிமன்ற நடுவர் ஆர். சதாசிவம் அவர்கள் மட்டும் ஒருநாள் வந்து கேட்டு மகிழ்வுற்றனர். பேராசிரியர்களும் அறிஞர்களும் மூன்று நாள்களும் தொடர்பாக வந்து கேட்டின்புற்று வியந்தனர்.

என் அன்பிற்குகந்த திருவாளர் சண்முக சுப்பிரமணியம் அவர்கள் தொடர்பு 1943 இல் முதன்முதல் எனக்கு ஏற்பட்டது. எனினும், பல ஆண்டுகளுக்குப் பின்னரே அவர்களைக் கழக நூலாசிரியராகப் பெறும் பேறு கிடைத்தது. அதனை ஈண்டு விளக்கி எழுதுவது எனது கடப்பாடாகும். 1—8—1943 இல் கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனார் திருவரங்கனாரவர்கள் திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் குடும்பத்தோடு குடியிருப்பதற்கு ஒரு வீடு அமர்த்திக் கொடுக்குமாறு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியினை அடியிலே குறிப்பிடுகின்றேன்.

"இத்துடன் திரு வ. கா. மீ. அவர்கள் பேர்த்தியின் மாப்பிள்ளை திரு. எம். சண்முகசுப்பிரமணிய பிள்ளை (அங்கே

Secretariat office ல் Public works Department ல்) வேலை பார்க்கிருர்கள். அவர்கள் 147, பவளக்காரத் தெருவில் ஒரு வீடு பார்த்திருப்பதாகவும் அந்த வீட்டுச் சொந்தக்காரர் திரு மாணிக்கவாசகம் அவர்களிடம் நீ சொன்னுல் அவர்கள் இணங்குவதாகத் தெரிவிப்பதாகவும் அவர்கள் திரு வ. கா. மீ. அவர்களுக்கு எழுதிய இத்துடன் வரும் கடிதத்தால் தெரிகின்றேன். அதற்கு அட்வான்சு கொடுத்து உடனே அவர்கட்கு முடித்துக் கொடுத்துத் தாக்கல் எழுது. நம் பக்கத்தில் அவர்களிருப்பது உனக்குமே நல்ல பயக்கும். இந்த விஷயத்தில் முனைந்து முயன்று ஆவன செய்து கொடு.''

இக்கடிதத்தில் திரு வ. கா. மீ. (மீனுட்சிசுந்தரம்பிள்ளை) என்பவர் பேராசிரியர் எம். எல். கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்களின் பெரிய தகப்பனுராவர். திரு மாணிக்கவாசகம் என்பவர் காஞ்சிமணிமொழியாராவர். 1937 இல் இந்தி எதிர்ப்பு இயக்கச் சார்பாக முதல் ஊர்வலம் 147 பவழக்காரத் தெருவிலிருந்துதான் தொடங்கித் தங்கசாலைத் தெரு தொண்டைமண்டலப் பள்ளியின் பின் பக்கம் சென்று முடிந்தது. அந்த வீட்டிலேதான் 'தமிழறிஞர் கழகம்' வழக்கறிஞர் திரு டி. எஸ். நடராச பிள்ளை அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. இந்தி எதிர்ப்பியக்கத்திலிருந்துதான் என் கெழுதகை நண்பர் காஞ்சி மணிமொழியார் அரசியலில் ஈடுபட்டுத் தி. மு. க. வில் சிறப்புறுப்பினராகவும் சட்டப் பேரவை உறுப்பினராகவும் அமர்ந்து புகழ் பெற்றனர்.

மேலே குறிப்பிட்ட கடிதத்தில் உள்ளவாறு பி.ஏ. பட்டம் பெற்ற திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் 147, மாடியில் ஓராண்டுவரை குடியிருந்தார்கள். அதன்பின் பாரசீக வளைகுடாப் பக்கம் இந்தியப் பேரரசைச் சேர்ந்த வெளிநாட்டு அலுவலகத்தில் ஈராண்டுகள் பணியாற்றினர். அதன்பின் சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து இரண்டாண்டுகள் பயின்று பி.எல். பட்டம் பெற்றனர், ஓராண்டு ஒய். எம் ஐ. ஏ. வில் தங்கிப் பணிபயில்பவ (Apprentice) ராக விருந்து பின் மதுரைக்குச் சென்று பெரிய வழக்கறிஞர் திரு துரைசாமிபிள்ளையவர்களோடு வழக்கு மன்றங்களில் வழக்கு நடத்துவதற்குத் துணைபுரிந்தனர். சில வழக்குகளைத் தனியேயும் திறமையுடன் நடத்திப் புகழ் பெறுவாராயினர்.

1955 இல் மாயூரத்தில் முதன்முதல் குற்றவியல் துணை நடுவராக அமர்த்தப்பெற்றுப் பின் 1956இல் சேலம் நகரில் மாவட்ட நடுவ (District Munsif)ராக மாற்றப்பெற்றனர். கழகக் குழந்தை நூல்கள் பல இயற்றிய திரு. என். கே. வேலன், பி.ஏ. அவர்கள் மூத்த மகளார் திருவளர் செல்வி சாந்தாவுக்கு 20-1-'57 இல் சேலத்தில் நடைபெற்ற திருமணத்

துக்கு யானும் என் மனைவியும் பொது மேலாளர் திரு. கலியாண சுந்கரமும் கழக உந்து வண்டியில் சென்றிருந்தோம். அப்போது என் தங்கை மகன் திரு. சு. திருஞானம் சேலத்தில் தொலை பேசிப் பொறித்துறை மேற்பார்வையாள(E. S. T.)ராகப் பணி யாற்றி வந்தனர். காலையில் நடைபெற்ற திருமணத்துக்கு யாங்கள்போய் உணவுண்டு திரும்பும் வழியில் திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்களை அவர்தம் இல்லத்திலே கண்டு பேசும் வாய்ப்புக் கிடைத்தது. 1952 இல் குழந்தை இலக்கியப் பரிசுத் திட்டத்திற்காகக் 'குற்றமும் தண்டனையும்' என்று அவர்கள் எழுதிப் பாரி நிலையத்தின் வெளியீடாக வந்த நூலுக்கு நடுவணரசு 500 ரூபா பரிசு வழங்கியது. மேலும் அவர்கள் சட்டப் போறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை யவர் கட்கு நெருங்கிய உறவினராமையாலும் சட்ட நூல்களைத் தமிழில் எழுதித் தருமாறு கூறினேன். அவர்களும் எனது வேண்டுகோளின்படி எழுதுவதாகத் தெரிவித்து மகிழ்ச்சியூட் டினர். பின்னர் 1958இல் மன்னார்குடிக்கு மாற்றப்பெற்றனர். ஆனால், சட்டநூலை எழுதவில்லை.

12—6—1960 இல் யான் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைவாய்த் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவுக்குச் சென்றிருந்தேன். அப்போது என் கெழுதகை நண்பர் உயர்திரு அ. உத்தண்டராம பிள்ளையவர்கள் (ஐ. ஏ. எஸ்.) அறநிலையத் துறை ஆணையராக விருந்தார். திருவிடைவாய்த் திருக்குட முழுக்குவிழாவுக்கு வருமாறு என்னை அழைத்தனர். அக் கோயில் கொரடாச்சேரிக்கு அருகிலுள்ளது. அதன் திருப் பணி செய்த கொரடாச்சேரி அருள்மிகு வாலையானந்த சுவாமிகள் என்னும் சச்சிதானந்த சுவாமிகள் காலமாகிவிட் டனர். அவர்கள் வாழ்ந்த காலத்தில் இரண்டு ஆண்டுகள் சித்திரை முதல் நாள் அவர்கள் திருமடத்திலே தங்கி அவர் களோடு அளவளாவும் அருட்பேறு பெற்றுள்ளேன். திருவிடை வாய்த் திருக்கோயில் மதிலில் பொறிக்கப்பெற்று அச்சிடப் பெறாத திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப் பதிகம் கழகப் பதிப்பிலே பின் இணைப்பாகச் சேர்க்கப்பெற் றுள்ளது. திருப்பணி செய்தபோதும் அப்பதிகம் பொறிக்கப் பெற்ற கற்களை அப்படியே எடுத்துச் சிதைவுறாமல் படிப்பதற் கேற்ப அமைத்துள்ளமை கண்டு பெருமகிழ்வுற்றேன்.

அத்திருக்குடமுழுக்கு விழாவுக்கு மன்னார்குடியிலிருந்து திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் தம் நண்பர் சில ருடன் வந்திருந்தனர். சேலத்திலே தங்களைக் கண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டனவே, சட்டநூல்களை எழுதியுள்ளீர்கள

என்று திரு. பிள்ளையவர்களிடங் கேட்டேன். தாங்கள் கூறியது நினைவிருக்கிறது. ஆனால், இதுகாறும் எழுதாமை குறித்து வருந்துகின்றேன். மன்னார்குடிக்குச் சென்றவுடன் சட்டவியல் (Jurisprudence) என்ற நூலை எழுதி அச்சிட அனுப்பிவைப்பேன் என்று உறுதிகூறிப் பேருவகை அளித்தனர்.

அவர்கள் தெரிவித்தபடி 2—3—61 இல் மன்னார்குடியிலிருந்து எழுதிய கடிதம் வருமாறு:

"நான் தங்களைச் சென்ற சூன் மாதம் திருவிடைவாயில் கும்பாபிடேக நிகழ்ச்சியில் மீண்டுஞ் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். புத்தகம்பற்றி நினைவூட்டினீர்கள்.

"திருவருளால் 'சட்ட நூல்' (Jurisprudence) என்னும் புத்தகத்தை முடித்து வைத்திருக்கிறேன். நேற்றுத்தான் பிரதி எடுத்து முடிந்தது. தமிழிலும் மற்ற இந்திய மொழிகளிலும் வெளிவராத நூல். தங்கள் கடிதம் கண்டதும் கையெழுத்துப் பிரதியை அனுப்பிவைக்கிறேன். கூடிய விரைவில் வெளியிடுவது நல்லது. அச்சடித்தபின் முன்னுரை தக்கவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என எண்ணுகிறேன்."

17—3—1961 இல் யான் எழுதிய மறுமொழிக் கடிதம் வருமாறு:

"திருவிடைவாயிலில் தங்களைக் கண்டு அளவளாவும் பேறு கிடைத்தது திருவருட் செயலே. சேலத்திலே பேசிய பேச்சு இப்போது உருவாகியுள்ளது என்பது அறியப் பெரு மகிழ்ச்சி தருகின்றது. தாங்கள் எழுதி வைத்திருக்கும் சட்ட நூல் (Jurisprudence) கையெழுத்துப் படியினைப் பதிவுசெய்து அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறேன். அதனை விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு முயல்வேன்."

8—4—1961 இல் சட்டநூலைப் பதிவு செய்தனுப்பி வைத்து எனக்கு எழுதிய கடிதம் வருமாறு:

"தாங்களே ஒருமுறை நூலை மேற்பார்த்து இலக்கணம் எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறு வேண்டுகிறேன். ஆங்கில நூல்களைத் தமிழில் எழுதுவது இயலாது என்று சாதிக்கும் ஒரு சாராரின் கூற்றுக்கு இந்நூல் ஓரளவு விடையாக இருக்குமென எண்ணுகிறேன். ஏனெனில், ஆங்கிலத்தில் உள்ள இந்நூல் மிகவும் நுட்பமான கருத்துக்களை (Abstract ideas) கொண்டது என்று கூறுவார்கள். இதை இந்தியில்கூட எவரும் இன்னும் எழுதத் துணியவில்லை என அறிகிறேன்."

ஆசிரியர் 12—4—1961 இல் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளைக் குறிப்பிடுவதும் முதன்மையாகும்.

"எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் ஒரு சில அதில் இருக்கின்றன. அவைகளைத் திருத்தி அமைக்க வேண்டு

கிறேன். பொருளை உணர்த்துவதில் வாக்கியங்களின் அமைப்பு சரியில்லை எனத் தாங்கள் கருதினாலும் வாக்கியங்களைத் திருத்தி யமைக்கவும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்நூலை எழுத முற்படுகையில் சிறிது அச்சத்துடன் துணிந்தேன். நூலை எழுத எழுத அச்சம் குறைந்தது. 'தமிழில் எழுத முடியும்' என்ற நம்பிக்கை நன்கு பிறந்தது. *தற்காலச் சட்டவியலின் அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் வகையில் திருக்குறள் பல அமைந்திருப்பதைக் கண்டு வியந்தேன். ஆங்கில நூல்களின் அடிப்படையில் பிறழாது எழுதப்பட்டது என்பது சட்டம் அறியாதவர்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகவே ஆங்கிலப் பேராசிரியரவர்களின் "Quotations" ஆங்காங்கே மிகுதியாகக் கொடுத்திருக்கிறேன். சட்டக்கல்லூரி மாணவர்களுக்கும் ஆங்கில வாக்கியங்கள் இருப்பது நலம்.

"இந்த விடுமுறையில் "Torts" என்ற சட்டம் பற்றிய புத்தகம் எழுதலாம் என எண்ணியிருக்கிறேன். திருவருள் கை கூடுவதாக."

1961 மேத் திங்களில் திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் வடார்க்காடு திருப்பத்தூருக்கு மாவட்டத் துணை நடுவராக மாற்றப்பெற்று 25-5-61இல் எழுதிய கடிதம் வந்தது. 1961 ஆகஸ்டுத் திங்களில் கழகத்தின் 1008 வது வெளியீட்டு விழாச் சிறப்பாக நடைபெற்று முடிந்தவுடன் சட்டவியலை அச்சுக்கோத்து அதன் மெய்ப்புகள் அவர்களது திருத்தத்துக்கு அனுப்பப்பெற்று நூலும் முடிவு பெற்றது.

9—9—1961 இல் திருப்பத்தூரிலிருந்து அவர்கள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.

"சட்டங்களுக்கெல்லாம் அடிப்படையான 'சட்டவியல்' பற்றித் தமிழில் சட்டக் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் எழுதத் துணியாதது குறிப்பிடத்தக்கது.

"Torts" ம் எழுதிக்கொண்டு வருகிறேன். ஓராண்டுக்கு ஒரு சிறந்த நூலாவது என்வழியே வெளிவர வேண்டுமெனத் தாங்கள் எழுதியிருப்பது எனக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது."

28—11—61 இல் ஆசிரியர் எழுதிய கடிதம் வருமாறு

"தங்கள் அன்பான கடிதம் கண்டேன். சட்டவியலுக்கு அணிந்துரை உயர்நீதிமன்ற நீதிபதி கணபதியா பிள்ளை அவர்களிடம் இருந்து பெற எண்ணியிருப்பது சாலப் பொருத்தமே. நானும் அதையே எண்ணியிருந்தேன்.

---

* 'குறள் கூறும் சட்டநெறி' என்ற நூலை எழுதுதற்கு இவர்கள் ஆக்கிய சட்டவியல், தீங்கியல் சட்டம், குற்றவியல் சட்டம் ஆகிய சட்ட நூல்களே காரணியமாகும் என்று முன்னமே குறிப்பிட்டுள்ளேன்.

"அச்சு வேலை முடிந்ததும் அதைப் புத்தக வடிவில் அவர்களிடம் நேரில் கொண்டு போய் நான் பார்த்துக் கொடுப்பது நலம் எனக் கருதுகிறேன். திசம்பர் மாதத்தில் சென்னை வந்து நீதிபதி அவர்களை நேரிற் காண்கிறேன்."

திருப்பத்தூரில் மாவட்ட நடுவராயிருந்தபோது 'சட்டவியல்' வெளியிடப்பெற்றது. 1962 மேத் திங்களில் கும்பகோணத்துக்கு மாற்றம் பெற்றார்கள். அங்கிருந்து 19—6—62 இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளும் அறிதற்பாலன.

"Torts மூன்றில் இரண்டு பங்கு முடித்துவிட்டேன். மீதியை இன்னும் சில வாரங்களில் எழுதிவிடலாமென எண்ணுகிறேன். நீதிபதி உயர்திரு கணபதியா பிள்ளை அவர்களைச் சென்ற மாதம் ஏர்க்காட்டில் சந்தித்தபொழுது சூலை அல்லது ஆகஸ்டில் நூலை முடித்தபின் அவர்களைக் காண்பதாகக் கூறியிருக்கிறேன். அச்சிடுவதற்குமுன் நீதிபதிகள் அதைப் பார்ப்பது நலம் என எண்ணுகிறேன். விரைவில் நூலை முடித்துத் தங்களைக் காண்பேன்.

"நீங்கள் எழுதியுள்ளபடி Evidence Act (சான்றியல் சட்டம்) முக்கியமானதுதான். (Torts) க்குப் பின் அதைத் தொடங்குகிறேன். திருவருள் துணைகொண்டு இரண்டையுமே தமிழாக்கிவிடலாம்.

"தாங்கள் காட்டும் அன்பும் ஊக்கமும் எனக்குப் பெரிய தூண்டுகோலாகவும் ஆர்வமூட்டும்படி இயக்குவதாகவும் இருக்கிறது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குச் சட்ட இயலை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்."

குறிப்பு :

1. கும்பகோணத்திலிருக்கும்போதே சட்டப் பேரவைக் குத் துணைச் செயலராக அமர்த்தப் பெற்றனர். எனவே, தமிழக அரசு ஆணையின்படி குற்றவியல் சட்டம் (Criminal Law) என்ற நூல் 1966 ஏப்பிரலில் தமிழ் வெளியீட்டுக் கழகவழி வெளியிடப்பெற்றுள்ளது.

2. சான்றியல் சட்டம் (Evidence Act) எனது விருப்பப்படி இன்றுகாறும் எழுதப் பெறவில்லை யான் தூண்டிக்கொண்டே

தான் இருக்கிறேன். செல்வியில் தொடர்ந்து எழுதி வரும் "இறைமையில் இசைந்த வாழ்வு" என்னும் சமயவுணர்வு நூலை எழுதி முடித்தபின் சான்றியல் சட்டத்தை எழுதுவதாக உறுதி கூறியுள்ளனர். "இறைமையில் இசைந்த வாழ்வு" என்ற சமய வுணர்வுக் கட்டுரைகள் அறிஞர் உள்ளங்களைக் கவர்ந்து எப்போது அக்கட்டுரைகள் நூல்வடிவில் வரும் என்று எதிர் பார்க்கின்றனர். சமயநூற் புலவர் எவரும் இதுகாறும் எழுதாத புதுத் துறையில் சட்டப் பேரறிஞர் எழுதி வருவது எல்லோ ருக்கும் வியப்பையும் மகிழ்வையுந் தருகிறது.

3. பரிசு பெறவேண்டிய 'சட்டவியல்' நூல் பரிசு வழங்கப்பெருமைக்குரிய நிகழ்ச்சி குறித்து விளக்கவஞ்சி வருந்துகின்றேன்.

18—1—1962இல் உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை சு. கணபதியா பிள்ளை அவர்கள் எழுதிய முன்னுரையுடன் 1962 பிப்பிரவரித் திங்கள் 7ஆம் நாள் திரு மயிலை உட்லன்சு விடுதியில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மாண்பமை மா. அனந்தநாராயணன் ஐ.சி.எஸ். அவர்கள் சட்டவியலைப் பெரிதும் பாராட்டி வெளியிட்டார்கள். இவ்விழாவிற்கு உயர்நீதி மன்ற நீதிபதிகள் மாண்பமை சதாசிவம் அவர்களும், மாண்பமை பி. எஸ் கைலாசம் அவர்களும், மாண்பமை சு. கணபதியா பிள்ளை யவர்களும், மாண்பமை கே. எஸ். வேங் கடராமன் அவர்களுமாக உயர்நீதிமன்ற நடுவர்கள் ஐவர் வந்திருந்தமை மிகவும் போற்றுதற்குரியது.

தமிழ்ப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களும் வழக்கறிஞர் த. செங்கல்வராயனவர்களும் நூலிலுள்ள சிறந்த கருத்துக்களை எடுத்து விளக்கிப் பேசினர். சட்டக் கல்லூரியின் போதனு மொழி தமிழாக இருக்கலாம் என்று பேசப்படும் இச் சமயத்தில் இந்நூல் வெளி வந்தது வரவேற்கத்தக்கதென்றும், இந்நூலில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாகக் காணப்படாதது மிகவும் குறிப்பிடத்தக்கதென்றும், இந்நூல் நாடு முழுவதிலும் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டுமென்றும், சைவ சித்தாந்தக் கழகம் இன்னும் இதுபோன்ற நூலை எழுதுமாறு ஆசிரியர்க்கு ஊக்கம் கொடுத்து வரவேண்டுமென்றும் குறிப் பிட்டுள்ளமை எண்ணத்தக்கது.

இவ்விழாவின் முழுவிவரங்களையும் செந்தமிழ்ச் செல்வி 36ஆம் சிலம்பு பரல் 6இல் கண்டு மகிழுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

அடுத்து ஆசிரியர் எழுதிய தீங்கியல் சட்டம் (Law of Torts) 1964 சனவரியில் வெளியிடப் பெற்றது. அதற்குத் தமிழ்நாடு அந்நாள் மாண்புமிகு முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் அளித்த அணிந்துரையும், உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை மா. அனந்தநாராயணன், ஐ. சி. எஸ், அவர்கள் எழுதிய முகவுரையும் நூலின் சிறப்பினையும் அருமையினையும் தெளிவுற விளக்குகின்றன. 21—1—1964இல் திருமயிலை உட்லன்சு விடுதியில் 'தீங்கியல் சட்டம்' கழகப் புலவர் இராம நாத பிள்ளை அவர்கள் எழுதிய 'திருவாசக விளக்கவுரை' ஆகிய இரண்டிற்கும் மாண்பமை நீதிபதி அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெற்றது. சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு செல்லப்பாண்டியன் அவர்கள் திருவாசக விளக்கவுரையைப் பாராட்டி வெளியிட்டனர். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கழகப் புலவர் இராமநாத பிள்ளை யவர்கட்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டுரை பகர்ந்தனர்.

தமிழ்நாடு அந்நாள் முதலமைச்சர் மாண்புமிகு பக்த வத்சலம் அவர்கள் தீங்கியல் சட்டநூலை வெளியிட்டு உள்ளப் பெருமகிழ்வுடன் பாராட்டினார்கள். முன்னாள் நீதிமன்றத் தலைமை நடுவர் திரு அய்யாசாமிச் செட்டியாரவர்கள் திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டுரை வழங்கினர்.

தமிழ்ப் பேரொளி அறிஞர் அண்ணா அவாகள் சிறையிலிருந்து தீங்கியல் சட்டம் என்ற நூலைப்பற்றி 29—11—1964 இல் "காஞ்சி" இதழில் எழுதியது காண்க :

> "திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் எழுதிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட "**தீங்கியல் சட்டம்**" என்ற நூலை அன்பர் சுப்பையா அவர்கள் தந்தனுப்பியதாகக் கூறி, அந்தப் புத்தகத்தைப் பரிமளம் தந்தான். பத்திரிகையில் அந்தப் புத்தகம் பற்றிப் படித்ததிலிருந்து அதைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தேன். யான் எதிர்பாராமலேயே அந்தப் புத்தகம் கிடைத்திருக்கிறது. மெத்த மகிழ்ச்சி."
>
> 29—11—64 **அண்ணாதுரை**

சட்டப் பேரவைத் துணைச் செயலராகப் பணியாற்றும் போதே நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்பமை மா. அனந்த

நாராயணன் அவர்கள் தலைமையிலமைந்த சட்டச் சொல்லாக்க ஐவர் குழுவில் திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் ஓர் உறுப்பினராகவிருந்து ''சட்டச் சொல்லகராதி'' என்ற நூல் உருவாக்கப்பட்டது. அப் பணியினை யாற்றும்போதே 'சட்டத் தமிழ்' என்ற சட்டச் சொற்களை விளக்கும் ஆய்வு நூல் 1969 மார்ச்சுத் திங்களில் கழகவழி வெளியிடப்பெற்றது.

அதற்கு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மாண்பமை திரு. மா. அனந்தநாராயணன் அவர்கள் அளித்த அணிந்துரையும் உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை கு. வீராசாமி அவர்கள் வழங்கிய மதிப்புரையும் நூலின் சிறப்பினையும் பயனையும் பாங்குற உணர்த்துகின்றன.

22—3—1969 இல் இராஜாஜி மண்டபத்தில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் அரசினர் வெளியிட்ட ''சட்டச் சொல்லகராதியும்'' கழகம் வெளியிட்ட சட்டத் தமிழும் வெளியிடப்பெற்றன. சட்டச் சொல்லகராதியைப் பற்றி டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பாராட்டியுரைத்து வெளியிட்டனர். சட்டத் தமிழ் என்ற நூலைத் தமிழகக் கல்வி, தொழில் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் பாராட்டிப் பேசி மாண்புமிகு உயர்நீதிமன்ற நடுவர் கு. வீராசாமி அவர்களிடம் அளித்தனர்.

ஆசிரியர் சட்டத்தமிழ் முகவுரையில் குறிப்பிடுவது:

''ஊதியம் கருதாது, தமிழ்மொழியின் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சட்டஇயல், தீங்கியல் சட்டம் போன்ற நூல்களை வெளியிட்டு இத்துறையில் முன்னேற்றம் காண்பதற்கு முழுமூச்சுடன் உதவியவர்கள் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஆவர். அன்னார் அளித்த ஊக்கமே நான் சட்ட நூல்களை எழுதியதற்கு ஒரு தூண்டு கோலாக அமைந்தது. அவர்களுக்கு எனது உளங் கலந்த நன்றி.''

நமக்கு உரிமை கிடைககப்பெற்ற ஆகஸ்டு 15 ஆம் நாளில் பிறந்த கழக நூலாசிரியர் மூவருள் திருவாளர் மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் ஒருவராவர். 15-8-1967 இல் செல்வி சிலம்பு 42, பரல் 1இல் 85 ஆம் அகவை எய்திய தணிகைமணி இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயபிள்ளை, (எம்.ஏ.) அவர்கள்

உருவப்படமும், 81 ஆம் அகவை எய்திய சைவப் பாதிரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை, (பி.ஏ.,எல்.டி.) அவர்கள் உருவப் படமும், 47,ஆம் அகவை எய்திய சட்டநூலறிஞர் திரு. மா. சண்முகசுப்பிரமணியம்,(பி.ஏ.,பி.எல்) அவர்கள் உருவப்படமும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களுடன் வெளியிடப்பெற் றுள்ளன.

18-12-1970இல் சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில் தொடங்கிய கழகப் பொன்விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழிய னவர்கள் தலைமை தாங்கினார்கள். வள்ளல் நா மகாலிங்கம் அவர்கள் வரவேற் புரையும் மாட்சிமைமிகு தமிழக ஆளுநர் சர்தார் உச்சல்சிங் அவர்கள் தொடக்கவுரையும் ஆற்றினர். கழகததுக்குச் சீரிய துறைகளில் நூல்கள் எழுதிய ஆசிரியர்கள் எழுவர்க்குப் பொன்னுடை போர்த்தி அம்பலவாணர் திருவுருவமைந்த அழகிய தட்டம் பரிசாக வழங்கப் பெற்றது. சட்டத்துறையில் நூல்களை எழுதிக் கழகத்துக்குப் புகழீட்டித் தந்த உயர்திரு மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் பரிசு பெற்ற எழுவருள் ஒருவராவர்.

என் அருமைத் தமையனார் வருமுன் அறிந்து 1-8-'43 இல் '**திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் நம் பக்கத்திலிருப்பது உனக்குமே நலம் பயக்கும்**' என்று விளம்பிய பொன்னுரை 1960ஆம் ஆண்டுமுதல் இதுவரை திரு. பிள்ளையவர்கள் சென்னையிலேயே தங்கிக் கழகத்திற்கு நூல்கள் வழிப் பேரும் புகழும் விளைத்துத் தாமும் மேலும் மேலும் புகழ் பெருக வாழ்ந்து வருவதன் வாயிலாய் மெய்யுரையாக விளங்குவதை எண்ணிஎண்ணி இறும்பூதெய்துகின்றேன்.

1-9—1961 இல் ஓராண்டுக்கு ஒரு சிறந்த நூலாவது என் வழி வரவேண்டும் என்று தாங்கள் எழுதியிருப்பது எனக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது என்று எழுதியுள்ளனர். அவர்கள் தொடர்பு ஏற்பட்ட பின் அந்தப்படி நூல்கள் எழுதப் பெற்று வெளிவந்துகொண்டிருக்கின்றன. இப்போது யான் கருதுவது திங்க ளொன்றுக்கு ஒரு சிறந்த நூலாவது அவர்கள் வழி வெளிவருதல் வேண்டுமென்று கூறினால் அது நிறை வேற்றப்படுமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்பதாகும்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் 14-1-'69இல் தாம் எழுதிய 'தீங்கியல் சட்டம்' என்ற நூலுக்கு முதற்பரிசு ரூபா ஆயிரமும், 7-4-1973இல் 'சட்டத் தமிழ்' என்ற நூலுக்கு முதற் பரிசு ரூபா இரண்டாயிரமும், நேருமாமா என்ற நூலுக்குச் சிறுவரிலக்கியப் பரிசு ரூபா ஐந்நூறும் பெற்றுள்ளனர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் பள்ளிகட்குத் துணைப்பாடமாகப் பயன்படும் வகையில் 1964 இல் 'லால் பகதூர்' 'கோபாலகிருஷ்ண கோகலே' என்ற இரு நூல்களையும் 1965 இல் ஆல்பர்ட் சுவைட்சர் என்ற நூலையும் 1968 இல் 'மார்ட்டின் லூதர் கிங்' என்ற நூலையும் கழகவழி வெளியிட எழுதித் தந்தனர்.

குழந்தைக் கல்விக்கும் நூலகத்துக்கும் பயன்படும் வகையில் 1964 இல் "நேருமாமா", "அண்ணல் நேருவின் அமுத மொழிகள்" என்ற இரண்டு நூல்களையும் 1972 இல் 'சிங்கத் தமிழர் சிதம்பரனார்' என்ற நூலையும் கழகம் வெளியிட எழுதித் தந்தனர்.

அவர்கள் "குறள் வழி அண்ணா" என்ற தலைப்பில் எழுதிய துணைப்பாட நூலைத் தமிழ்ப் புத்தக நிலையத்தாரும், "பாரதி படைத்த வாழ்க்கை நெறி" என்ற நூலைத் தமிழரசு பாடநூல் நிறுவனத்தாரும் வெளியிட்டுள்ளனர்.

1963 இல் சட்டப் பேரவைத் துணைச் செயலராகவும் பின்னர் இணைச் செயலராகவும் அதன்பின் கூட்டுச் செயலராகவும் இப்போது செயலராகவும் படிப்படியே உயர்ந்து சிறப்பெய்தியுள்ளனர். இப்பணியோடு தமிழக ஆட்சிமொழிச் சட்ட ஆணைக் குழுவிலே செயலுறுப்பினராகவு மிருந்து இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியதோடு நடுவணரசுச் சட்டங்களும், தமிழ்நாடு சட்டங்களும், தமிழில் மொழி பெயர்க்கப்பெற்று வருகின்றன.

திரு பிள்ளையவர்கள் நுண்மாண் நுழைபுல மிக்க பேரறிஞராவர். சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை யவர்களைப் போலவும், திரு. வி. க. அவர்களைப் போலவும் எத்தகைய கடினமான பொருளையும் எளிய இனிய ஓசை நயமிக்க ஆற்றொழுக்கான நடையில் எழுதுந் திறம் படைத்தவர். சட்ட நூல்களில் எடுத்தாளப் பெறும் இலத்தீன் மேற்கோள்களையும், ஆங்கில மேற்கோள்களையும் செய்யுள் நடையில் மொழி பெயர்த்தமைத்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. ஒவ்வொரு திங்கள் கார்த்திகை நாளும் நோன்பிருந்து இரவு பால் மட்டும் அருந்துவர். ஒய். எம். சி ஏ. பட்டி மன்றத்தின் தலைவராக அமர்ந்து தமிழ்ப் பணியாற்றுகின்றனர். திரு பிள்ளையவர்கள் நீடு வாழ்கவென வாழ்த்துவோம்.

(தொடரும்)

—வ. சு.

உயிர்மெய் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

நுல்² (துளைத்தற் கருத்துவேர்)—தொடர்ச்சி

தனிச்சொல், கூட்டுச்சொல் எனச் சொல் இருதிறப் படுவது போன்றே, தனிக்கருத்து, கூட்டுக்கருத்து எனக் கருத்தும் இருதிறப்படும்.

நுழைதல் என்னுஞ் சொல்லில், நுண்மை, புகவு என்னும் இரு கருத்துக்கள் கலந்துள்ளன. இடுக்கமான வாயில் அல்லது புழை அல்லது இடைவெளி வழியாக, உடம்பை ஒடுக்கியும் ஒடுக்காதும் உட்செல்வது நுழைதல் என்றும், உடம்பைச் சற்றும் ஒடுக்காது, நிமிர்ந்து தாராளமாக ஒரு பெருவாயில் வழி உட்செல்வது புகுதல் என்றும், சொல்லப்படும். இவ்வழக்கு காட்சிப் பொருள் கருத்துப் பொருள் ஆகிய இருவகைக்கும் பொருந்தும். ஆதலால், புகவுச் சீட்டை நுழைவுச்சீட்டு என்றும், புகவுத் தேர்வை நுழைவுத் தேர்வு என்றும், வழங்குதல் தவறும்.

நுழு — நுழுது. நுழுதுதல் = தலைமயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல். "மயிர்நுழுதி மருங்குயர்ந்த தேசுடைய சிகழிகையில்" (பெரியபு. ஆனாய. 15). க. நுலிசு, தெ. நுலுமு.

நுழுது—நுழுந்து. நுழுந்துதல் = (செ. குன்றா. வி.) 1. நுழைத்தல், செருகல். 2. தலைமயிரை முடித்தல். "திருக்குழலைக் குலைத்து நுழுந்த" (ஈடு, 10 : 1 : 1). 3. நுழைத்து மறைவான இடத்தில் வைத்தல், மறைத்து வைத்தல்.

(செ. குன்றிய வி.) 1. பதுங்குதல் (யாழ்ப்.). 2. நழுவுதல். (யாழ்ப்.). 3. நகர்தல். (யாழ்ப்.).

நுழு—நுழை, நுழைதல் = 1. இடுக்கமான இடைவழி உட்செல்லுதல். திருடன் பலகணி வழியாய் வீட்டிற்குள் நுழைந்து விட்டான். (உ. வ.). "மலர்ப்பொழி னுழைந்து" (சிலப். 10 : 35). 2. இடைச் செருகலாய் அமைதல். தொல்காப்பியத்துள்ளும் ஆரியக் கருத்து நுழைந்து விட்டது. (உ. வ.). 3. வலக்காரமாக அல்லது கமுக்கமாக ஒரு வேலையிற் சேர்தல். அவன் மெள்ள மெள்ள நடுவணரசு

அலுவலகத்தில் நுழைந்து கொண்டான். (உ.வ.). 4. நுண்ணி தாக விளங்குதல். அது அவன் மதியில் நுழையவில்லை. (உ. வ.).

ம. நுழுக, க. நொளெ.

நுழை = 1. சிறுவழி. "பிணங்கரி னுழைதொறும்" (மலை படு. 379). 2. பலகணி. (பிங்.).

நுழை கடவை, நுழைவழி, நுழைவாயில் முதலியன சிறு திறப்புக்களை அல்லது வாயில்களை உணர்த்துதல் காண்க.

நுழு — நுழல் — நுணல் = மணலிற்குள் நுண்ணிதாய் முழுகிக் கிடக்கும் தவளைவகை.

> "மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
> நுணலுந்தன் வாயாற் கெடும்." (பழ. 184)

நுணல்—நுணலை. (பிங்.).

நுணா = நுணல் போன்ற காய் காய்க்கும் மஞ்சணாறி மரம்.

நுணா – நுணவு. (மலை.) = மஞ்சணாறி மரம்.

நுணவு—நுணவம் = மஞ்சணாறி மரம்.

"நாகுமுதிர் நுணவம்" (சிறுபாண். 51).

நுல்[3] (ஒளிர்தற் கருத்து வேர்)

ஒளி நெருப்பின் பண்பாதலால், நெருப்பைக் குறிக்குஞ் சொற்களினின்றே ஒளிர்தல் (விளங்குதல்) கருத்துச் சொற்கள் பெரும்பாலுந் தோன்றும்.

எ - டு: தீ = நெருப்பு. தீவம் (—Skt. dipa) = விளக்கு. தீ (—Skt. dhi) = அறிவு (அகவொளி).

எரிதல் = வேதல், விளங்குதல். ஒளி = நெருப்பு, விளக்கு, அறிவு, புகழ்.

காய்தல் = எரிதல், விளங்குதல்.

தழலுதல் = எரிதல், விளங்குதல். தகுந்தகு மெனல் = எரிதல், ஒளி வீசுதல். தகதகவெனல் = விளங்குதல். திகழ் தல் = ஒளிர்தல்.

பொறி = அனல்துகள், ஒளி.

முளிதல் = எரிதல். மிளிர்தல் = ஒளிர்தல்.

நுல்—நெல்—நெலி—ஞெலி = உரசித் தீப்பற்றும் மூங்கில். நெல்—நெரு—நெருப்பு = உரசிப் பற்றும் தீ.

நெல்—நில்—நில. நிலத்தல் = ஒளி வீசுதல்.

நில—நிலத்தி = மின்மினி. (சூடா.).

நில = நிலா. "நிலவிரி கானல்."

நிலத்தி—நித்தி—நித்தில் = மின்மினி (நாமதீப. 253).

நித்தில்—நித்திலம் = ஒளிரும் முத்து.

"உரைபெறு நித்திலத்து மாலை" (சிலப். 3 : 112 - 3).

நித்திலக் கோவை (முத்துமாலை) என்பது அகநானூற்றின் மூன்றும் பகுதிப் பெயர்.

நில—நிலா = 1. திங்கள். "துணிநிலா வணியினான்" (திருவாச. 35 : 5). 2. நிலாவொளி. "விசும்பி னகனிலாப் பாரிக்குந் திங்களும்" (நாலடி. 151). 3. ஒளி. "நிலா விரித்து முச்சக முற்றும் நிழல்செய்" (திருநூற். 78). ம. நிலா, தெ. நெல.

நில—நிலவு. நிலவுதல் = ஒளி விடுதல். (பிங்.)

நிலவு = நிலா. "நிலவுப் பயன் கொள்ளு நெடுமணன் முற்றத்து" (நெடுநல். 95).

நில—நிழல் = 1. ஒளி. "நிழல்கா னெடுங்கல்" (சிலப் 5 : 127). 2. படி வடிவம் (பிரதி பிம்பம்). "நிழனோக்கித் தாங்கார் மகிழ்தூங்கி" (சீவக. 2790). 3. சாயை. "நாணிழற் போல" (நாலடி. 166). 4. குளிர்ச்சி. (சூடா.). 5. அருள். "தண்ணிழல் வாழ்க்கை" (பட்டினப். 204). (உ. வ.) 6. நயன்மை (நீதி. பிங்.). 7. பேய். (உ. வ.)

ம. நிழல், க. நெழல், தெ. நீட.

நிழலுதல் = 1. ஒளி விடுதல் "நெய்த்தலைக் கருங்குழ னிழன்று" (சீவக. 1101). 2. படிவடி விடுதல் (பிரதிபலித்தல்.) (W). 3. சாயை வீழ்த்தல். "வண்டுந் தேன்களு நிழன்று

பாட" (சீவக. 1270). 4. காப்பா யமைதல். "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" (சிறுபாண். 233).

நிழற்றுதல்=1. ஒளி விடுதல். "பசும்பொ னவிரிழை பைய நிழற்ற" (ஐங்குறு. 74). 2. சாயை வீழ்த்தல். "கொல் களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்" (புறம். 9). 3. மணி யடித்தல். "நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள்" (முல்லைப். 50).

நிழற்று — நிழறு. நிழறுதல் = ஒளி விடுதல். "திண் சக்கர நிழறு தொல்படையாய்" (திவ். திருவாய். 6 : 2 : 5).

நிழல்—நிழலி=1. ஒளி (திவா.). 2. நயன்மை. (நீதி. பிங்.).

நிழல் — நீழல் = 1. ஒளி. 2. சாயை 3. காப்பு. 4. காப்புடைய நாடு. "பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க் காண்பர்" (குறள். 1034).

நீழை= ஒளி. "நீழை யாண்மலர்" (அரிசமய. குலசே. 5).

நிழல்—நிணல்=சாயை.

நிழல்—நிகர்=1. ஒளி. "நீர்வார் நிகர்மலர்" (அகம். 11). 2. சாயை. 3. சமம். "நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்" (நாலடி. 64). 3. சமமாய் நின்று செய்யும் போர்.

ஒ. நோ : சமம்=ஒப்பு, போர். சமம்—சமர்.

நிகர்தல்=ஒத்தல். "மஞ்சை நிகருந் தியாக வள்ளலே" (விறலி விடு. 902).

நிகர்த்தல்=1. விளங்குதல். "தஞ்சேணிகர் காவின்" (திருக்கோ. 183). 2. ஒத்தல். "கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை" (தொல். பொ. 290). 3. உறழ்தல், மாறு படுதல். "தன்னொடு நிகரா வென்னொடு நிகரி" (ஐங்குறு. 67).

நிகர்ப்பு=ஒப்பு, போர்.

நிழல்—நிறன்—நிறம்=1. ஒளி. "நிறப்பெரும் படைக் கலம்" (கம்பரா. கைல. 30). 2. வண்ணம். "நிறங்கொள் கண்டத்து நின்மலன்" (தேவா. 370 : 4). 3. சாயம். 4. இயல்பு. "வின்னிற வாணுதல்" (திருக்கோ. 58). 5. இசை,

இசைத்திறம். (ஈடு, 2 : 6 : 11). 6. ஆளத்தி வகை. "நிற வாளத்தி நிறம் குலையாமற் பாரணை யுடனிகழும்" (சிலப். 3: 26, உரை). 7. புகழ். "இவனோடு சம்பந்திக்கை தரமன்று நிறக் கேடாம்" (ஈடு, 4 : 9 : 3). 8. ஒளியுள்ள மார்பு, மார்பு. "செற்றார் நிறம் பாய்ந்த கணை" (கலித். 57). 9. நடுவிடம். "கடலிற் றிரைநிறஞ் சேர்மத்தின்" (திருமந். 2313). 10. உடம்பு. "மெல்லியலை மல்லற் றன்னிற மொன்றி லிருத்தி நின்றோன்" (திருக்கோ. 58). 11. தோல். "புலி நிறக் கவசம்" (புறம். 13).

ம. நிறம்.

நெல்=பொன்போல் விளங்கும் கவசம் (கூலம்). "சடைச் செந்நெல் பொன் விளைக்குந் தன்னாடு" (நள. 68), 'பொன் விளைந்த களத்தூர்' என்னுந் தொடர்களை நோக்குக. நெல்லிற்குச் சொல் என்னும் பெயர் தோன்றியதும் இக் கரணியம் பற்றியே.

சுல்—சுல்லி=அடுப்பு, மடைப்பள்ளி.

சுல்—சுள்—சுடு—சுடர். சுல்—சொல்—சொலி. சொலித்தல்—எரிதல், விளங்குதல். சொலி—வ. ஜ்வல்.

ம., க., நெல்.

நெற்கஞ்சி, நெற்சோறு, நெற்பொரி என்னுங் கூட்டுச் சொற்களில், நெல் என்பது நெல்லரிசியைக் குறிக்கும்.

நெல்—நெள்—நெழு—நெகு—நெகிழ்—நெகிழி.

நெகிழி=நெருப்பு. (அக. நி.).

நெகிழி—நெகிடி=நெருப்புக் குவை. "மதயானை......... நெகிடிக்கெனப் பெரிய கட்டை மிகவேந்தி" (தாயு. மௌன குரு. 7). தெ. நெகடி.

நெகிழி — ஞெகிழி = 1. தீக்கடை கோல். "ஞெகிழி பொத்த" (குறிஞ்சிப். 226). 2. கொள்ளிக் கட்டை. "விடு பொறி ஞெகிழியிற் கொடிபட மின்" (அகம். 108). 3. தீ. (பிங்.).

நெகு — நகு. நகுதல் = 1. விளங்குதல், திகழ்தல். "பொன்னனக் கன்னசடை" (தேவா. 644 : 1). 2. முகம் விளங்குமாறு சிரித்தல். "நகுதற் பொருட்டன்று நட்டல்"

(குறள். 784). 3. முகம் விளங்குதற் கேற்ப அகம் மகிழ்தல். "மெய்வேல் பறியா நகும்" (குறள். 774). 4. பூ மகிழ்தல் போன்று மலர்தல். "நக்க கண்போ னெய்தல்" (ஐங்குறு. 151). 5. சிரித்து அவமதித்தல். "ஈகென் பவனை நகுவானும்" (திரிகடு. 74). க. நகு (டு), தெ. நவ்வு.

நகு—நகல்—நக்கல்=1. ஒளி. (அரு. நி.). 2. சிரிப்பு. (சூடா.). 3. இகழ்ச்சி, நகையாண்டித்தனம் (பரிகாசம்). அவன் நக்கலாய்ப் பேசுகிறான். (உ. வ.).

நகு—நகை=1. ஒளி. "நகைதாழ்பு துயல் வரூஉம்" (திருமுரு. 86). 2. சிரிப்பு. "நகை முகங் கோட்டி நின்றாள்" (சீவக. 1568). 3. மகிழ்ச்சி. "இன்னகை யாயமோ டிருந் தோற் குறுகி" (சிறுபாண். 220). 4. இன்பம். "இன்னகை மேய" (பதிற்றுப். 68 : 14). 5. பூவின் மலர்ச்சி. "நகைத் தாரான் தான் விரும்பு நாடு" (பு. வெ. 9 : 17). 6. மலர். "எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்" (பரிபா. 13 : 59). 7. நட்பு. "பகை நகை நொதும லின்றி" (விநாயகபு. நைமி. 25). 8. நயச்சொல். (திவா.). 9. விளையாட்டு. "நகை யேயும் வேண்டற்பாற் றன்று." (குறள். 871). 10. நையாண்டி (பரிகாசம்). "நகையினும் பொய்யா வாய்மை" (பதிற்றுப். 70 : 12). 11. அவமதிப்பு. "பெறுபவே ...... பலரா னகை." (நாலடி. 377). 12. பல்லிளிப்பு. 13. அணிகலம். 14. முத்து. "அங்கதிர் மணிநகை" (சீவக. 603). 15. முத்து மாலை. "கோதை நகையொருத்தி" (கலித். 92 : 33). 16. பல். "நிரைமுத் தனைய நகையுங் காணாய்" (மணி. 20 : 49). 17. நகைச்சுவை. "நகையே அழுகை இளிவரல் மருட்கை" தொல். மெய்ப். 3).

ம., தெ., து. நக (g). க. நக (g), நகெ (g).

நகு—நகார்=பல். "மடவோர் நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்" (சிறுபாண். 57).

நகு — நங்கு = நையாண்டி. "நங்கு தெறிப்பதற்கு நாடெங்கும் போதாது" (ஆதியூரவதானி).

நங்குதல்=நையாண்டி செய்தல். "நங்க வொழியினும்" (பழமலை. 50). தெ. நங்கு.

நங்கு காட்டுதல், நங்கு வலித்தல் என்பன ஒக்க நடித்து நையாண்டி செய்தலைக் குறிக்கும் வழக்குச் சொற்கள்.

நகு — நகர் = 1. விளங்கித் தோன்றும் மாளிகை. "பாழி யன்ன கடியுடை வியனகர்" (அகம். 15). 2. வளமனை. "கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்" (புறம். 70). 3. அரண்மனை. "நிதி துஞ்சு வியனகர்" (சிலப். 27 : 200). 4. சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபம். "அணிநகர் முன்னினுனே" (சீவக. 701). 5. இல்லத்தில் வாழும் மனைவி. "தன்னகர் விழையக் கூடி" (கலித். 8). 6. அரண்மனை யொத்த கோவில். "முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புறம். 6). 7. மாளிகையும் அரண்மனையும் மண்டபமும் கோயிலும் போன்ற கட்டிடங்களாற் சிறந்து விளங்கும் ஊர். "நெடுநகர் வினைபுனை நல்லில்" (புறம். 23). தெ. நகரு.

நகர்—நகரி = சிறந்து விளங்கும் கட்டிடங்களையுடைய ஊர். நகரி — வ. நகரீ. 'இ' சினை முதலீறு.

நகர்—நகரம் = 1. பெருமாளிகை. 2. பெரிய அரண்மனை. 3. பெருங்கோயில். "மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்" (சிலப். 14 : 9). 4. வாழிடம். "நகர மருள் புரிந்து நான்முகற்குப் பூமேல்" (திவ். இயற். முதற். 33). 5. "மாநகர், பேரூர்" (சூடா.).

'அம்' பெருமைப் பொருட் பின்னொட்டு. இற்றைத் தமிழர் அதை அறியாது பொதுப் பொருளில் வழங்குகின்றனர்.

நகரம்—வ. நகர.

நகர் என்னும் மூலச் சொல்லும், அதன் நகு என்னும் மூலமும், வடமொழியில் இல்லை. தமிழை வடமொழி யென்னும் சமற்கிருதக் கிளையாகக் காட்டலையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப்புலவர் தொகுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியில், நகர் நகரி நகரம் ஆகிய மூவடிவுச் சொல்லும் வடசொல்லாகவே காட்டப் பட்டுள்ளன. நாம் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் உயர்ந்த பண்பாட்டை யுடையவரேனும், நாட்டு வரலாறொத்த மொழி வரலாற்றைச் சிதைப்பதும், உலகில் முதன் முதல் நாகரிக விளக்கேற்றிய நம் முன்னோரைத் தகவிலாரெனக் காட்டுவதும், அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அரும்பாடு பட்டுத் தேடி வைத்த அருஞ் செல்வத்தைப் போற்றாது வாரி வாரியில் எறிவதும், அறியாமையையோ, அடிமை மனப்பான் மையையோ, இறப்ப இழிந்த தன்னலத்தையோ, படுகோழைத் தனத்தையோ, தமிழைப் பகைவர்க்கு வெளிப்படையாகக்

காட்டிக் கொடுக்கும் நாணமில்லாச் செயலையோதான் காட்டும். பண்பாடு வேறு; காட்டிக் கொடுப்பு வேறு.

மக்களின் பழக்க வழக்கங்கள் முதன்முதல் நகர் அல்லது நகரத்திலேயே திருந்தின. அதனால், சிற்றூர் வாணனையோ நாகரிகமில்லாதவனையோ நாட்டுப் புறத்தான் என்று இழித்துக் கூறுவது இன்றும் வழக்கமா யிருக்கின்றது. வாழ்க்கைத் திருத்தம் அல்லது பண்பாடு நகரத்தில் தோன்றியதனாலேயே, நாகரிகம் என்னும் பெயர்த்தாயிற்று.

நகர்—நகரகம்—நகரிகம்—நாகரிகம்.

நகரிப் பழக்கம் = நகர் வாணரின் திருந்திய ஒழுக்கம்.

நகர்ப்புறத்தான் (நாகரிகன்) X நாட்டுப் புறத்தான் அல்லது பட்டிக்காட்டான் = திருந்தாத பழக்க வழக்கத்தான்.

ஒ. நோ: E. urban = living in a city or town, urban = polite, urbanity = polished manners.

L. civis = citizen, civil = polite, civilization = advanced stage in social development.

முதற்கண் நகரங்களில் வழங்கியதனாலேயே, இற்றை வட மொழி யெழுத்து நாகரி யெனப்பட்டது. வடமொழி தேவ மொழி யென்னும் ஏமாற்றினால், அது தேவநாகரியென வழங்கும்.

நாகரிகத்தின் அடிப்படை

மக்கட் கூட்டத்தாரின் நாகரிகமெல்லாம், அவர் வழங்கும் மொழியினால் நன்கு அறியப்படும். நாகரிகமில்லாத மக்களின் மொழியானது நாளுக்கு நாள் உருமாறியும், மற்றமொழிச் சொற்களோடு கலந்துங் கடைசியில் தானொரு மொழியென்றே யில்லாமல் மாய்ந்து போகின்றது.

—மறைமலையடிகளார்

(மறைமலையடிகளார் உரைமணிக்கோவை, பக். 61)

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ருகூசு ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. யூதர் நட்பு

யூதர் யூகர்

தென்னாப்பிரிக்காவில் எனக்கு அரிய யூத நண்பர் வாய்த்தனர். எல்லாரும் நிரம்பப் படித்த புலவர்; பொன்வளங் கொழிக்கும் செல்வர். தங்க—வைரச் சுரங்க முதலாளிகள். அவர்களிடம் நான் பணத்தை எதிர்பார்க்கவில்லை; மனத்தக்க மாண்பையே வேண்டினேன். எனது திருக்குறள் ஆங்கிலம் (Tirukkural Couplets) கழக வெளியீடு, சைவநாயன்மார் வரலாறு (Grand Epic of Saivism), யோக சித்தி (Gospel of Perfect Life) முதலிய நூல்களை அவர்களிற் சிலர் படித்துப் பயன் கண்டனர். நான் அவர்களிடம் யூதநூல்களைப் பெற்றுக் கற்றுப் பயன் பெற்றேன். எங்கள் பேச்சு மூச்செல்லாம் இன்பந் திளைத்தன, யூதர் யூகர்.

பெண்டாடுஷ்

யூதர் இட்டிஷ் (Iddish) அல்லது ஈபுரு (Hebrew) மொழியினர். பைபிள் பழைய ஏற்பாட்டில் அவர் வளமையைக் காணலாம். கி. மு. 2000-த்தில் விளங்கிய அபிரகாமே யூத முதல்வர்; அவர் பாலத்தீனில் 175 ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் பேரன் யாகோபு (இஸ்ரேல்) எகிப்தில் எழுந்தான். இவன் மரபில் வந்த (மோஸஸ்) (மூஸா கி. மு. 1225) கடவுளைத் தீவண்ணனை ஒரு மலை மேலே கண்டு "நானே நான்" (*I am That I am*) என்ற திருமந்திரத்தைப் பெற்றான். இதைத் திருமூலர் ஏழாவது தந்திரத்தில் விளக்குகிறார்:

> ''நானென நீயென வேறில்லை நண்ணுதல்
> நானிது தானென நின்றவன் நாட்டாறும்''

மோஸஸ் அருளிய அறநெறியே **பெண்டாடுஷ்** (Pentatush) அல்லது **தோரா** (Thora) எனப்படும். அஃது ஐந்து நூல்களாகும். பெண்டா என்றால் கிரீக்கில் ஐந்து என்பதாம்: அவையாவன:

(1) Genesis = தோற்றம்

(2) Exodus = இஸ்ரேலர் பயணம்

(3) Levitocus = Ceremonial laws = சடங்கு முறைகள்

(4) Numbers = எண்ணிக்கை

(5) Deteronomy = திருமொழிகள்.

இவை ஐந்தும் பைபிள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. யூதர் சட்டங்களை டால்மட் (Talmud) என்பர். இவை பிற்காலப் பெரியார் கோத்தவை. தோராவும் 'டால்மட்'டும் கண்ட நீதி நெறிகள், திருக்குறளில் பொதிந்துள்ளன.

டாக்டர் சைமன்

எனது யூத நண்பரிற் சிறந்த புலவர் டாக்டர். ஏ. சைமன் (Dr. A. Simon 95, West Cliff Drive, Park View, Johansburg.) இவர் எனது ஆங்கில பிரெஞ்சு நூல்களையெல்லாம் படித்தவர்; தத்துவப் புலவர், கல்லூரிப் பேராசிரியர்; கல்விக் களஞ்சியம். இவருடன் உரையாடலே அறிவின் விருந்தாகும். இவ்வளவு கற்றவர் "பணியுமாம் என்றும் பெருமை" என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினுர். இவர் பிரெஞ்சு அறிஞர். ஆதலால் நாங்கள் பிரெஞ்சிலேயே உரையாடினேம்.

யூதத்திலே திருக்குறள்

யூதத் திருமறைகளை ஆராயும்போது திருக்குறளின் உள்ளம் அவற்றில் துடிக்கின்றது. யூதத்தில் உள்ள திருக்குறள் கருத்துக்களை இனிக் காண்போம்.

(1) பிறர் குற்றம் பார்க்கும் முன் தன் குற்றம் அறிக.

(2) தன் நெஞ்சறிவது பொய்யற்க.

(3) உன்போல் அடுத்தவனை விரும்பு.

(4) கடவுள் ஒருவனே; அவன் அருவன்; நெஞ்சில் உறைபவன். (இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் மலர்மிசை ஏகினுன்) தனக்குவமை இல்லாதான்.

(5) அன்பே உயிர்நிலை; அறமே இன்பம்.

(6) அறத்தாற்றின் இல்வாழ்க்கை அனைவருக்கும் ஆக்கந்தரும்.

(7) தீதொரீஇ நன்மை செய்தலே மூதுரை.

(8) பெருமிதச் செருக்கு, இரத்தவெறி, பொய்க்கரி, வஞ்சச்சூழ்ச்சி, சூது, பொருமை, சோம்பல், தேம்பல் இவற்றை ஒழித்து நேர்மையும் சீர்மையும் பேணி நடக்க வேண்டும்.

(9) ஞாயிறு தொழுகை நழுவாதே - தொழுகையே தூய்மை.

(10) உனக்குத் தீங்காவதைப் பிறருக்குச் செய்யாதே.

டாக்டர் சைமன் காலை எட்டுமணி முதல் ஒன்பது வரையில் என்னுடன் உரையாடி எனது கனியுணவைச் சுவைத்துச் செல்வார். அவருடன் யூதக்குருமாரும் (ரப்பிகள் Rabbis) கலந்து தோரா-மேற்கோள் பொழிவதுண்டு.

யகோவா—ஏகசிவா

சித்தாந்த சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் நான் பேசுவது. பேச்சிடையே திருமந்திரக் கருத்து விரவி வரும். அதை அவர் குறித்துக் கொள்வார். யகோவா—ஏகசிவா, ஆதிஆதாம், என்று நான் விளக்கும்போது ரப்பிகள் வழிபாட்டு நூலிற் புகுந்து ஆராய்ச்சி நடத்துவதுண்டு. அப்பர் தேவாரமும், திருவாசகமும், திருமந்திரமும், திருக்குறளும் விளக்கம் செய்யும்போது—நாடாப்பதிவு (Tape-record) நடக்கும்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை"

என்ற அப்பர் தேவாரத்தை விளக்கும்போது "The Lord is with me I will not fear-கடவுள் என்னுள் இருக்கிறார்; நான் எதற்கும் அஞ்சேன்" என்ற வரிகளைப் பாடுவர் ரப்பிமார். "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அப்பர் துணிவை விளக்குவேன். "Blessed art Thow, O God, King of the Universe who hast not made me a bondman" "கடவுளே, போற்றி; உலகக் கோமானே போற்றி! அவன் என்னை யாருக்கும் அடிமையாக்கவில்லை" என்ற வரிகளை எடுத்தாளுவர் ரப்பிமார்.

உள்ளத் தொருவனை உணர்க.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

One - minded sage sees inner Truth
He is free from thoughts of rebirth.

என்ற குறளுக்கு இரண்டு நாட்கள் ஆராய்ச்சி நடந்தது.

Delve deep within yourself
And you will find holiness.

என்ற யூத-வுண்மையைச் சொல்லிச் சொல்லித் தமிழ் முனிவர் கருத்தை அவர் போற்றுவார்.

> **"உள்ளத் தொருவனை, உள்ளுறு சோதியை,**
> **உள்ள உள்ள ஒளி நிறைவாமேனி**
> *உள்ளத்தான், ஓங்கும் உலகத்தான், பேரின்ப*
> *வெள்ளத்தான் விண்ணின் விளக்கு"*

என்ற வரிகளை விளக்கியபோது யூத-அறிஞர் " What is there shines here, Thunder clouds there flow as rivers here" வானில் விளங்குவதே மண்ணகத்தில் ஒளிர்கிறது; மேலே குமுறும் மேகங்களே, இங்கே ஆறுகளாக ஓடுகின்றன என்று கருத்தொருமை கூறி மகிழ்ந்தனர்.

யூதாலயம்

யூதரின் சினகாக் (Synagogue) என்னும் கோயிலுக்குட் சென்றேன். அங்கே கருவறையில் மூசாவின் கட்டளைகள் செதுக்கப்பட்டுள்ளன. மேலே அறுகோணக் குறியுள்ளது. எதிரே மேடையுள்ளது. அதில் பியானோவுடன் அருளிசை முழங்குகிறது. அடியார்கள் சுற்றிலும் ஒழுங்காக, நல்ல உடையணிந்து அமைதியாக அமர்ந்து இசையுடன் இசைந்து பாடுகின்றனர். மாலையில் கருவறையில் மெழுகுதிரிகள் எரிகின்றன; கோயில் முழுதும் மின்விளக்கு பளிச்சிடுகிறது.

திருமணங்களும், மற்றச் சடங்குகளும் கோவிலிலேயே நடக்கும். ஒவ்வொரு சடங்கிற்கும் பொருத்தமான பாடல்கள் முழங்கும். யூதர் கற்ற புலவரைக் கண்ணெனப் போற்றுவர்.

ஜெண்டில் ஐஸக்

கிம்பர்லி யூதக் கோயிலில் ஒரு கவர்ச்சியான வள்ளல் என்னை வரவேற்றார். இவர் பேச்சு சுருக்கம்; செயல் பெருக்கம். இவரே எனது விமானச் சீட்டிற்கு ஏற்பாடு செய்தார். இவர் என்னைப் பல அறிஞருக்கு அறிமுகப்படுத்தினார். இவரது

உந்து வண்டி எனக்கு எப்போதும் உதவியது. இவரது எழிலும் தொழிலும், உண்மையும் வண்மையும், கல்வியும் செல்வமும், கருணையும் கடவுளன்பும் என் உள்ளத்தை அள்ளின. என் பேச்சை இவர் பதிவு செய்தார்: என் சுற்றுலாவைப் படச் சுருளாக்கினார். இவர் தமது சமயநூலை எப்போதும் சட்டைப் பையில் போட்டிருந்தார். இரவில் அதை நெஞ்சில் வைத்து இறை வணக்கம் படித்துப் பிறகே துயில் கொண்டார்.

சமயத்தைப் பேணுக!

இந்த மாதிரி நாம் நமது திருவருட் சமயத்தைப் போற்ற வேண்டும். நம் அருட்கலையைக் காக்க வேண்டும். நாம் இன்னும் உறங்கினால் இருப்பவரும் நமது சமயத்தை வெறுப்பவ ராவார். பெரும் அளவில் பிறமதம் புகுந்து நமக்கே எதிரிக ளாவார். யூதர் தம் சமய நூல்களை ஏராளமாக அச்சிட்டு வழங்குகிறார்கள். நமது சமயத்தை இவ்வாறு போற்றித் தொண்டாற்றேமா? பாருங்கள் யூதயோகியை.

யூதயோகி

யோகிராசர் மானிஃபிங்கர் (Yogi Raj Mani Finger) தமது குடும்பத்துடன் எழுந்தார்; வண்ணப்படம் பிடித்தார்; வருக என்று அழைத்தார். மாலை ஆறுமணிக்கு அன்பருடன் லெனேசியாவிலிருந்து ஜோஹான்ஸ்பர்கு வெள்ளையர் மாளிகைகளூடு மானிஃபிங்கர் யோகாலயத்திற்குச் சென்றோம். அடடா! என்ன அன்பு, அடக்கம், வணக்கம், இணக்கம், ஒட்பம், திட்பம், ஒழுக்கம், விழுப்பம்! பேச்சில்லை; வீடு பேசு கிறது; பண்பாடு பேசுகிறது, கண்ணோட்டம் பேசுகிறது. தூய கூடம்; அங்கே வெண்ணறிஞர், ஆடவரும் பெண்டிரும் அமைதியாக நிற்கின்றனர்; நான் ஒரு மேடைமேல் அமர்ந் ததும், அவர்களும் கீழே அமர்கிறார்கள்; நறும்புகை மணக் கிறது; மலர்கள் புன்னகைக்கின்றன. கண்கள் ஆர்வமுடன் நோக்குகின்றன. இரண்டு மணித்துளிகள் தியானம்; பிறகு ஆங்கிலத்தில் வழிபாடு; அதைத் தமிழிலும் பாடுகிறேன்.

ஒருவா பரமா!

Hail Pure Almighty Grace
　　Eternal Guiding Light
Give us strength and resource
　　To serve Thee day and night

Let all be one in Thee
Equal children of Grace
And let human hearts see
One God one Universe
And one cosmic human race!

எல்லாம் வல்ல இறைவா போற்றி
எங்களை நடத்தும் இரவியே போற்றி
தூயனே போற்றி! நேயனே போற்றி
பகலும் இரவும் பணிநலம் பேணும்
ஆற்றல் அளிப்பாய் அருட்பெரும் பரமா!
உன்னில் ஒன்ருய், உன்னருட் செல்வராய்
மானிட ரெல்லாம் மங்கல மாக
ஓரருட் குலமென ஒரு பேருலகில்
ஓங்கச் செய்வாய் ஒருவா போற்றி!

எந்தக் கூட்டத்திலும் இருமொழிகளிலும் வணக்கம் பாடுதல் எனது வழக்கம். ஆங்கிலத்தை முன்னே எழுதிக் கொடுத்த தால் எல்லாரும் என்னுடன் இனிய குரலெடுத்தனர்.

ஓகமே யோகம்—சமயோகம்

"நான் அறிந்த யோகிகள்" என்ற பொருள்பற்றி நான் ஒருமணி நேரம் ஆங்கிலத்திற் பேசினேன். அதன் சுருக்கம் அறிக:

"எங்கள் நாடு ஆன்மநேய வுரிமையில் எழுந்த யோக நாடு. எங்கள் பொதுமக்களுக்கு எலெக்ட்ரன் புரோடன் நியூட்ரன் என்ருல் புதிதா யிருக்கலாம். கடவுள், ஆன்மா, சிவன், சீவன், அறம், அன்பு, கோயில், யோகம் என்ருல் எல்லாரும் அறிவார்கள். யோகம் என்ருல் ஓகம் உகுதல் ஒருமைப்பாடு, உயிர் உள்ளத்தாணுகிய இறைவனுடன், சீவன் சிவனுடன் உகந்து கலந்து வாழ்வதாகும். Yoga is to *yoke* the mind to the heart, the heart to the Soul and the Soul to God. நமக்குள் சீவன் நான்நான் என்று துடிக்கிறது; இந்த நான் என்பதை மலையாளிகள் ஞான் என்பர்; அதுவே ஞானம் என்ருனது; நான்—ஞானமே gnosis (கிஞசிஸ்) அதுவே knowledge (நாலெட்ஜ்) ஆனது. இவ்வாறு நானின் விரிவே ஞானம், அது தான் என்று உள்ளே தாண்டவமாடும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதுவே யோகம் ஆகும். எங்கள் சமயம் சம யோகம்; மனவேறுபாட்டால் பிரிந்துணரும் சீவனை மன ஒருமையால் உள்ளே திருப்பி உற்றுநோக்கிச் சிவனுடன் ஒன்று

படுத்துவதே சமயோகம். ஒருமையுள் அடங்கினுல் இருமையும் இன்பம்.

யோக சித்தர்

மாணிக்கவாசகர் என்ற அருட்பெரியார் மந்திரியானுர்; பட்டம் பதவிகளைப் பெற்ருர்; பாண்டிய மன்னனுக்கு உயிரா யிருந்தார்; நாடெல்லாம் நல்லமைச்சன் எனப் புகழ் பெற்ருர்; இவையெல்லாம் அவருக்கு மகிழ்ச்சி தரவில்லை. "நானுர், என் உள்ளமார் ஞானங்கள் யார்? என்னை யார் அறிவார்" என்று உள்ளே வினவி, சிவகுருவின் அருளால் இருள் கடிந்து, உள்ளத்தே ஞாயிறு போன்று சிவனொளி விளங்கப் பெற்றதுமே இன்புற்ருர். சரியை, கிரியை, யோகம், ஞானம் (ஒழுக்கம், வணக்கம், ஒருமை, அறிவு) என்று நான்கு பயிற்சிகள் உண்டு; இவற் ருலேதான் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிற் சிக்கி வருந்தும் ஆன்மா தூயதாகிச் சிவம் பெறும். தவம்தரும் இன்பமே சிவம். இந்த இன்பத்தை அடைந்தவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர் போன்ற யோகப் புலவர். இந்தக் காலம் நான் அறிந்த சில யோகப் புலவர் அருள்பெற்று விளங்கினர்—சீரடி சாயிபாபர், ஞானசித்தர், பூரணனந்தர், இரமணமுனிவர், அரவிந்தயோகி முதலியோருடன் நான் பழகி அவர்களுடன் தியானித்து யோக சக்தியை வளர்த் துள்ளேன். இவர்கள் பெரும்பாலும் மௌனத் தனிமையில் நீண்ட ஆண்டுகள் நிலைத்திருந்த பிறகே உலகறிய உள்ளறிவை அள்ளி வீசி உறங்கும் உலகை ஒளிபெற எழுப்பினர். இவர்கள் "இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி" என்றும் மாந்தர் உள்ளத்திற் குடிகொண்டனர்.

அருளாலே உள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாலே இன்பப் பொலிவு
என்றும் இருப்பதனில் என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு

என்ற உள்ளுண்மைகளை நாம் அறிந்து மனத்துள்ளடங்கி, உள்ளே நின்ருல் ஒருமை கூடும், ஒண்மை ஒளிரும். எனது அருட்குருநாதரான ஞானசித்தர் குண்டலி தீட்சையளித்து ஏழு வயதில் என்னை யாட்கொண்டார். அவருடன் நான் சிலகாலம் இமாலயம் அகத்திய குகையில் இருந்தேன். அப்போது நான் பெற்ற காட்சிகளே பாரத சக்தி மகாகாவியமாக உருக் கொண்டன. யோக சித்தியும் சக்தியும் அற்புதங்களை ஆற்ற வல்லன. அவை சிலருள் பாடிச் செல்லும்; சிலர் வாயிலாக

உலகில் ஆடிச்செல்லும். உலகில் அருள்வியன்கள் நடப்ப தெல்லாம் யோகசித்தியாலேதான். அத்தகைய யோக சித்தியைத் திருமூலர் என்ற தெய்வப் புலவர் "ஏகத்தின் ஞானமே யோகத்தின் சித்தி" என்றார்.

ஒன்றினை ஒன்றலே யோகம் ; அலைமனத்தை
வென்றிடின் ஒன்றும் விரைந்து.
Yoga is at-one-ment with the one;
That comes when the wandering mind is won—

யோக நிலையம்

இதன் பிறகு கற்பூர ஒளியிற் கலந்த தியானம் நடந்தது. "சிவசிவ ஓம்" என்ற மந்திரம் முழங்கியது. நன்றியுரையுடன் கூட்டம் முடிந்த பிறகு விருந்து நடந்தது.

யோகி ஃபிங்கர் மாளிகைத் தோட்டம் தவத்திற் கேற்றது; அங்கே பூம்புனற் பொய்கை யுண்டு ; அதில் மிதந்து இன் புற்றேன். யோகமாணவர் இருக்கைகளும், உயிர்ப்படக்கமும் பயிலுகின்றனர். அவர்கள் உடல் ஒண்மை, மனம் திண்மை, உள்ளம் வண்மை. அத்தகைய யோக நிலையம் தெருத் தெருவாக அமைந்த நமது நாடும் பேரின்ப வீடாக விளங்க வேண்டும்.

மறுநாள் பல அன்பர் வீடுகளுக்குச் சென்றோம். அழகான சிவ முருகர் கோயில்களைக் கண்டோம். இராமகிருஷ்ணர் பெயரால் எழுந்த திருமாட மாளிகையின் கவினை வியந்தோம். சிவ முழக்கத்துடன் விமானம் ஏறினோம். தரு தரு தரு தரு— தருவா (Durban). (தொடரும்)

ஒண்முத்தி சித்தியே

ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.

—திருமந்திரம் 2627.

கன்னட மொழிச் செப்பேட்டில் காரோடன்

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

பல்லவர்களுடைய செப்பேடுகளில் கோபால தேவனின் ஹாஸ்தியூர் செப்பேடு கன்னட மொழியில் உள்ளது. இந்தச் செப்பேட்டில் சில உரிமைகள் வழங்கினது குறிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் தொழில், வணிகத் தொடர்பான உரிமைகள் எனத் தெரிகின்றன. அவை, கொள குப்பை, ஜெலாஸி, கானஸொப்பு, லாரல், கர்ஸபின்டம், கெம்பை காரோடம்' என்பனவாகும். இந்த உரிமைகளின் பெயர்கள் பிற கல்வெட்டு களில் திராவிட மொழிகளில் காணப்படவில்லை. இவை எவற்றைக் குறிக்கும் என்பது கல்வெட்டறிஞர்களுக்குப் புரியாத தாக உள்ளது. ஆனால் இந்த உரிமைகளில் கடைசியாகக் கூறப்பட்டுள்ள 'கெம்பை காரோடம்' சங்க நூல்களில் சொல்லப் பட்டுள்ளது என்பதைக் காணும்போது வியப்படையாதிருக்க முடியாது. காரோடம் என்பது சங்க நூல்களில் சாணை பிடிக்கும் தொழிலைக் குறித்து வந்த பெயராகும். சாணை பிடிக்கும் கல்செய்வோர்க்குக் காரோடன் என்ற பெயர் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. கெம்பை என்பது கன்னட மொழியில் சிவப்பு நிறத்தைக் குறிக்கும். செம்பு என்பதே கன்னட மொழியில் கெம்பெ என்று வழங்கும். கெம்பெ காரோடம் என்பது சிவப்புச் சாணைக்கல் செய்யும் உரிமையைக் குறித்தது என்று தெரிகின்றது.

சங்க நூல்களுள் அகநானூற்றில் காரோடனைப்பற்றி இரண்டு பாடல்களில் செய்திகள் வருகின்றன.

"அறுகோட் டியானைப் பொதினி யாங்கண்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொற்றும்" —அகம் 1.

"தொன்னசை காவாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேன் ஆகி யற்றது" —அகம் 356.

பொதினியிலும் நன்னன் பறம்பிலும் சிறுகாரோடன் என்பவன் பயினொடு சேர்த்திய கல்போல என்று கூறப்பட்டுள்ளது. சிறுகாரோடன் செய்தல் அவ்வளவு உறுதியானது, பிரியாதது, உடையாதது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவன் தலைவி

யொடு கொண்ட உறவு காரோடன் பயினொடு சேர்த்திய கல்போலப் பிரியாதது என்று மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

காரோடன் என்ற பெயர் எப்படி வந்தது என்பதை ஆராயலாம். சாணைக்கல் மிகவும் கனமானதும் உறுதியானது மாகும். இந்தக் கல்லை உறுதியாக வைரம் பாய்ந்த மரஉருளை களில் இணைத்துச் சாணைபிடிக்கும் கருவி செய்வார்கள். இத் தகைய மர உருளைகளை எல்லா மரத்திலும் செய்ய இயலாது. அதிர்ச்சியையும் அழுத்தத்தையும் நன்கு தாங்கக் கூடியதும், உள்ளே அடர்த்தி நிறைந்ததுமான மரம்தான் இத்தகைய வேலைக்கு நன்கு பயன்படும். உறுதியான கருங்காலி, செங்காலி மரங்களையே உலக்கை, செக்கு முதலியவற்றுக்குப் பயன் படுத்துகின்றனர். ஈட்டி, கத்தி முதலியவற்றிற்குப் பிடியாகவும் பயன்படுத்துகின்றனர். சாணை பிடிக்கும் உருளைக்குக் காடு களில் வளரும் சில உறுதியான மரங்களையே பயன்படுத்து கின்றனர். இந்த உறுதியான மரங்களில் காரோடை என்று திருவனந்தபுரக் காடுகளில் வழங்கப்படும் மரமும் ஒன்றாகும். இந்த மரத்தை நீரோடை என்றும் அழைப்பர். இதன் அடிமரம் சுற்றளவில் சிறியதாயினும் வைரம் பாய்ந்து சிவப்பாக இருக்கும். இதன் இனத்தைச் சார்ந்ததுதான் கருங்காலி மரமும். நற்றிணையிலும் (338) ஐங்குறுநூற்றிலும் (93) மோரோடம் என்றொரு மரம் குறிப்பிடப்பட்டுள்ளது இதற்குச் செங்கருங்காலி மரம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதையே குறிஞ்சிப் பாட்டில சிறு மாரோடம் என்று கூறியுள்ளனர். பெருங்கதை உரையாசிரியர் மோரோடமென்பது மாரோடமென வழங்கும் என்று கூறியுள்ளார். கருங்காலி மரமும் செங்கருங்காலி மரமும் உறுதியான அடிமரமுடையவையாகும். இவை இரண்டும் ஒரே மரமென்று மயங்குவதும் உண்டு. ஆனால், இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்த இருவேறு மரங்களாகும். இந்த இரு மரங்களின் வைரம் பாய்ந்த அடிமரம் அதிர்ச்சியைத் தாங்கும் உருளைகளுக்குப் பயன்படும். (Compressive strength make it useful for pressure bearings) கருங்காலி மரத்திலிருந்துதான் வெற்றிலையில் போடும் கத்தைக்காம்பு செய்யப்படுகின்றது. ஓடை என்ற சொல் ஒரு மரத்தைக் குறித்து வழங்கியது.

''ஓடையே ஓடையே ஓடையே ஓடையே
கடற் பழனத்தும் கொல்லி மலைமேலும்
மாறன் மதகளிற்று வண்பூ நுதல்மேலும்
கோடலங் கொல்லைப் புனத்துக் கொடுங்குழாய்
நாடி உணர்வார்ப் பெறின''

—யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்.

முதலில் வரும் ஓடை என்ற பெயர் குடைவேலன் மரத்தைக் குறித்ததாகும். குடைவேலனைச் சங்க நூல்களில் உடை என்று அழைப்பர். உடை என்பது ஒடை, ஓடை என்று வழங்கி யிருக்கும். உதிமரம் ஒதி என்று வழங்குவது காணலாம். ஓடை என்ற குடை வேலனுக்கு இனமான மரங்களைக் காரோடை, சில்லோடை, நீரோடை என்ற பெயர்களால் இன்றும் வழங்குகின்றனர். இவற்றில் கரிய அடிமரமுடைய மரத்தைக் காரோடை என்றழைத்தனர். இந்தக் காரோடையே காரோடன் என்று சங்க காலத்தில் அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இந்த மரம் கருங்காலியாகவும் இருக்கும். கருங்காலி மரத்திற்கு வேறு பெயர் சங்க நூல்களில் காணப்பட வில்லை. செங்கருங்காலியை மோரோடம் என்று அழைத்ததைக் காண்கிறோம். காரோட மரத்தால் செய்த உருளையைச் சாணைக் கல்லுடன் பயினால் (பிசின்) இணைத்து வேலை செய்தவனைக் காரோடன் என்றழைத்தனர். வெள்வேலன் என்ற மரம் சில்லோடை என்று இன்று வழங்குவதுபோல, செங்கருங்காலி மரம் சங்க நூல்களில் சிறு மாரோடம் என்று வழங்கியதுபோல் இந்த மரத்திற்குச் சிறு காரோடம் என்ற பெயர் வழங்கி யிருக்கலாம். ஆதலின், அந்தச் சிறு காரோடம் மரத்தில் வேலை செய்தவனுக்குச் சிறு காரோடன் என்று பெயர் வழங்கிற்று. சிறு என்ற அடைமொழி காரோடனை குறித்ததாகக் கொள்வது பொருத்தமற்றது. கருங்காலி மரம் உறுதியாக இருந்தாலும் அடிமரம் சிறியதாகவே இருக்கும். பெரிதாகக் கிடைப்பது அரிது.

சங்க காலத்தில் நன்னன் பறம்பில் சாணை பிடிக்கும் கல்லைச் செய்தவர்கள் காரோடன் என்றழைக்கப்பட்டனர். நன்னன் பறம்பில் வேலை செய்த இந்தத் தொழிலாளர் இத் தொழிலில் சிறப்பானவராகத் தமிழகத்தில் கருதப்பட்டனர். ஆதலின் பிற்காலத்தில் இவர்களைப் பறம்பர் என்று அழைத் தனர். திவாகர நிகண்டில் காரோடன் என்ற பெயர் உறை காரருக்கு உரிய பெயராகக் கூறப்பட்டுள்ளது. சிலப்பதி காரத்தில் அடியார்க்குநல்லார் ‘தோலின் துன்னர் என்பதற்கு உறைகாரர் பறம்பர் முதலாயினோருமாம்’ என்று உரை கூறி யிருப்பது கவனிக்கத்தக்கது. சாணைக்கல் செய்த காரோடர் பிற்காலத்தில் தோல் உறைகளைச் செய்யும் தொழிலைக் கொண்டதால் உறைகாரர் எனப்பட்டனர். நன்னனின் நாடான ஏழில்மலையையும் அவன் தலைநகரான பாரத்தையும் வடமலையாளத்தில் நான் ஆராய்ந்தபோது பாரத்தைச் சுற்றி முரம்பு நிலமான மேடிட்ட பறம்புகள் எங்கும் காணப்படுவதைக்

கவனித்தேன். நன்னன் தன் பறம்பில் காரோடர்களைக் குடியேற்றி அவர்களைச் சிறப்புச் செய்ததால் பிற்காலத்தில் காரோடர்களின் இனத்தோடு நன்னன் குலத்தையும் சேர்த்துக் கதை கூறினர். இப்போது ஏழில்மலையிலும், பாரத்தைச் சுற்றிய இடங்களிலும் நன்னனைப் பற்றிச் சில கதைகள் வழங்குகின்றன. நன்னன் தோலில் காசுகள் அடித்தான் என்பது அக்கதைகளுள் ஒன்று. அக் காசுகளை அவன் சேர்த்துப் பதுக்கினான். அவற்றை நாயும் நரியும் தின்று போட்டன என்று கூறுவர். அங்குக் கன்னடத்தில் 'நன்னனின் பதுக்கு நாயும் நரியும் தின்று போயிற்று' என்று கூறுகின்றனர். அத்துடன் நன்னனைத் தோல் வேலை செய்யும் செம்மார், சக்கிலி சாதியினன் என்றும் கூறுகின்றனர். ஆனால், நன்னன் தமிழகத்தில் மூவேந்தர்க்கு அடுத்த நிலையில் இருந்த உயர்ந்த வேளிர் குலத்தைச் சேர்ந்தவன் என்பதை இக்காலம் அங்கு வாழ்பவர்கள் தெரிந்தாரில்லை. நன்னன் பெண் கொலை புரிந்தவன் என்று புலவர்கள் இகழ்ந்ததால் அவன் குடி கெட்டழிந்து அந்தக் கெட்ட பெயரே தொடர்ந்து வழங்கி மிகப் பிற்காலத்தில் நன்னனைக் காரோடர் குடியினன் என்றும் தோலில் தொழில் செய்வோர் குடியினன் என்றும் கொண்டனர்.

சங்க காலத்தில் சாணைக்கல்லை இயற்கையில் நிலத்தில் தோண்டியெடுத்தனர். அந்தக் கல்லை மர உருளையோடு பயினால் சேர்த்து இணைத்தனர். பயின் என்பது ஒரு காட்டு மரம். இந்த மரம் குறிஞ்சிப் பாட்டில் கூறப்பட்டுள்ளது. இதன் பிசின் இன்றும் வார்னிசு (Varnish) போன்றவற்றில் பயன் படுத்தப்படும். இதன் பிசின் காட்டில் கிடைக்கும் வணிகப் பொருளாக விற்கப்படுகின்றது. பிசின் என்ற பெயரே பயின் என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். பயின் மரத்தின் பிசின் உறுதியாக ஒட்ட வைப்பதில் சிறந்ததுமாகும். இயற்கையில் கிடைக்கும் சாணைக்கல் வைரம், மரகதம் போன்ற கற்களின் இனத்தைச் சேர்ந்த கல்லாயினும் மிகத்தாழ்ந்த வகைக் கல்லாகும். இதை ஆங்கிலத்தில் (Corundam) என்றழைப்பர். இந்த ஆங்கிலப் பெயர் 'குருந்தம்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்ததாக ஆங்கில அகராதிகள் கூறும். முற்காலத்தில் தமிழ் நாட்டில் இக் கல் தோண்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். சாணைக்கல்லும் வணிகப் பொருளாகச் சிறப்புப் பெற்றிருக்கலாம். ஆனால், குருந்தம் என்ற தமிழ்ச் சொல் கோரண்டம் என்று ஆங்கிலத்தில் மாறியதா அல்லது காரோடம் என்ற பெயர் ஆங்கிலத்தில் அப்படி மாறியதா என்பது ஆராய்வதற்குரியது. காரோடம் என்பதே ஆங்கி

லத்தில் கோரண்டம் என்று மாறியதாகக் கொள்ளலாம். சங்க காலத்தில் சிறப்புற்ற காரோடத்தொழில் பல்லவர்கள் காலத்தில் ஓர் உரிமையாகச் சிலருக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. கள் இறக்குவது ஈழகுலச் சான்ருர்க்கு ஓர் உரிமையாகப் பல்லவர்களால் வழங்கப்பட்டதுபோல் காரோடம் செய்வதும் ஓர் உரிமையாகப் பல்லவர்களால் கொடுக்கப் பட்டதையே கோபால தேவனின் கன்னடச் செப்பேடு காட்டு கின்றது. சங்ககாலத்தில் காரோடர் வாழ்ந்த நன்னனுடைய நாடு இன்று மலையாளம், கன்னடம் பேசுமிடமாக மாறியுள்ளது. பல்லவர்கள் காலத்தில் இந்தக் காரோடர் கன்னட நாட்டிற்கும் சென்று குடியேறியிருக்கலாம். சங்க நூலில் வழங்கிய காரோடன் என்ற பெயர் பல்லவர் காலத்தில் கன்னடத்திலும் காரோடம் என்று வழங்கியிருந்தது தெளிவாகிறது.

தமிழ் நூல்களில் காணப்படும் குறிப்புகள்

அழிந்துபோன தமிழகத்தில் உள்ள நாடுகள், மலைகள், கலைகள், ஆறுகள், ஏறுகள், ஏடுகள், கோடுகள், மன்னர்கள், பின்னர்கள், புலவர்கள், வலவர்கள் முதலியவைகளைப் பற்றிய குறிப்புகள் தமிழ் நூற்களில் ஓரளவு காணப்படுகின்றன. தண் பொருநைபாறு பொதிகை மலையில் தோன்றி, கிழக்கு நோக்கிச் செல்கிறது. இதனைப் பொருந்தம் என்று புகல்வர். தண் பொருநையை வடமொழியாளர் தாம்பிரபர்ணி என்பர். இந்த யாறு கிழக்கு நோக்கி நெடுந்தூரம் சென்று இலங்கையையும் வளப்படுத்தி வந்தது. இதனுல் இலங்கைக்குத் தப்பிரபோன் என்ற பெயர் எழுந்தது. சந்திரகுப்தர் அரசவையில் கிரேக்கநாட்டு அரச தூதராக இருந்த மெகஸ் தனீசு இலங்கையைத் தாம்பிரபனே என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கை இந்தியாவில் உள்ள ஓர் ஆற்றினுல் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். மூசற்கடல் கோளில் கிழக்குக் கடற்கரையில் உள்ள பல பட்டினங்கள் அழிந்து போயின என்று தெரிகிறது.

"கோநகர்—கொற்கை"

பக்.—14.

மின்னல் பூ

[செஞ்சொற் கொண்டல், புலவர்,
டாக்டர் செ. சிங்காரவேலன், M.A., Ph.D.

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.]

கவிதை அநுபவம்

"வாழ்க்கை அவசரக் கோலமாக மாறிக் கொண்டிருக்கிறது. கவிஞன் வடித்துத் தருகிற கவிதையை நிதானமாகப் படித்து அனுபவிப்பதற்கும் நேரங் கிடைப்பது அரிதாகி விட்டது."—ஆம்; இப்படிக் கவிஞர் பெ. தூரன் அவர்கள் தம் 'மின்னல் பூ' கவிதைத் தொகுப்பின் முன்னுரையிலே கூறுவது, இக்காலச் சுவைஞர் மனப்பான்மையைச் சுருக்கமாகக் கூறுவதாக அமைகின்றது.[1] சிறுகதை படிக்கின்ற ஆர்வம், நாவல் படிக்கின்ற உற்சாகம், தொடர்கதை படிக்கின்ற விறு விறுப்பு இன்று கவிதை படிப்பதில் பெருவாரியாக இல்லை. இதன் காரணம் என்ன? கவிதையைப் படித்து அநுபவிப்பதற்குப் பொறுமை உணர்ச்சி வேண்டும்; எதிலேயும் பொறுமை உணர்ச்சியும் நிதானமும் இல்லாமல் பர பரக்கின்ற சமுதாயத்திற்குச் சிந்தனைச் சிதறல்களாகிய கவிதைகளிடம் நின்று, நோக்கி, ஆழ்ந்து, ஆழ்ந்து, கவிஞன் படைக்கும் தனி உலகத்திற்குச் செல்ல நேரம் இல்லை.

பெ. தூரன் மேலும் கூறும் பகுதியைத் தொடர்ந்து காண்பது கவிதை கற்போர்க்கு ஒரு சீரிய வழிகாட்டி: "கதை படிப்பது போலக் கவிதையைப் படிக்கக் கூடாது. அப்படிப் படித்தால் கவிதையைப் பூரணமாகச் சுவைக்க முடியாது. அமைதியாக இருந்து கவனமாகக் கவிதையைப் படிக்க வேண்டும். அதுமட்டும் போதாது. கற்பனைத் திறத்தையும் கூடச் சேர்த்துக்கொண்டு படிக்க வேண்டும். பல தடவை படிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும், சந்தமும், அசைவும், நெளிவும், குறிப்பும், மறைப்பும் என்னென்ன உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்புகிறது என்று கண்டு அனுபவிக்க அதுதான் வழி."[2]

---

1. மின்னல் பூ - ம. ப. பெரியசாமித் தூரன்—பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1.—3ஆம் பதிப்பு 1970—பக். 5.

2. இந்நூல்—பக். 6.

கவிதையும் உரைநடையும்

கவிதையைப் படித்தல் வேறு; அனுபவித்தல் வேறு. படிப்பதற்காக உரைநடை எழுகிறது; அனுபவிப்பதற்காகக் கவிதை எழுகிறது. படித்த ஆசிரியன் உரைநடை எழுதுகிறான். அனுபவித்த கவிஞன் கவிதை வடிக்கிறான். உரைநடையில் அறிவு தோய்கிறது. கவிதையிலோ உணர்ச்சி மூழ்கித் தோய்கிறது.

பெரும்பாலும் உண்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டு உரைநடை தலை தூக்குகிறது. அநுபவ இன்பத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு கவிதை தலையெடுக்கிறது. இப்படித்தான் சொல்லலாம் கவிதையையும் உரைநடையையும் பற்றி. கவிதையைப் பாடி அனுபவித்தால்தான் கவிஞன் பெற்ற அனுபவத்தை நாமும் அடையலாம்; அடைய முடியும். புதிய கவிதைகளையும், பழைய கவிதைகளையும் இவ்வாறு பாடி உணர்ந்து அனுபவிப்பதே இலக்கியச் சுவைஞரது தலையாய கடன் ஆகும்.

உள்ளத்து மின்னல் பூ

புதிது புதிதாக யாப்புக்களைக் கண்டு படைப்புக் கவிஞர்கள் கவிதை சமைத்தலைக் காண்கின்றோம். எத்தகைய கட்டுப்பாட்டிற்கும் அடங்காமல் மனம் போனவாறெல்லாம் எழுதுவது சிலர் போக்கு என்றாலும், நிலைபேறும், தரமும் உடைய ஏதோ ஒன்றைப் படைத்து, உணர்வுலகத்திற்குத் தர வேண்டும் என்னும் வெறியினால் உந்தப்பட்ட கவிஞர்கள் இப் போக்கிற்கு ஆட்படமாட்டார்கள். இந்த அமைப்பினோடு 'மின்னல் பூ'வை ஒருமுறை நோக்கினாலும், ஆசிரியருடைய புதிய யாப்பு முயற்சிகளை அறிய முடிகின்றது. எடுத்துக் காட்டாகத் 'தருவாய்' என்ற கவிதையைக் கவிஞரே காட்டியுள்ளார்; பதினான்கு வரிகளைக் கொண்டது சானெட் (Sonnet) என்பதனுடன் நில்லாது உள்ளடக்கத்திலும் செய்யப்பட்டுள்ள அமைப்பு வேறுபாடு கவனிக்கத் தக்கதாக உள்ளது.[1] ஆம்; 'வெவ்வேறு காலத்திலே பளிச்சிட்ட மின்னல்கள். அவற்றை யெல்லாம் சேர்த்து ஒருமாலையாகத் தொடுப்பதே ஒரு சிறந்த அனுபவம்' தான்.[2] இந்த இன்ப அனுபவத்திற்கு அனைவரையும் ஆற்றுப் படுத்துவதுடன் நில்லாது உடன் அழைத்துச்சென்று திளைக்கவும்

---

1. இந்நூல்—பக். 9.
2. இந்நூல்—பக். 10.

வைக்கின்றது 'மின்னல் பூ.' ஒரு நொடிப் பொழுதில் பளிச்சிட்டு முடிந்துவிடும் மின்னல் அன்று இது; உள்ளத்து மின்னலாய் நீண்டகாலம் இருந்து பின்பு கவிதை வடிவெடுத்த கவின் பூக்கள்; கவிப்பூக்கள் இவை.

அழகு வழிபாடு

அழகிய மழை பெய்து ஓய்ந்துவிட்ட ஓர் இனிய மாலைப் பொழுதிலே, அழகு நடனம் கண்டு கூத்தாடுகின்றது கவிஞர் உள்ளம். 'மழை முழுகிய தழைகள் அசையும் பளபளப்பு'; 'பரிதி வட்டத் தகதகப்பு'; 'குழலில் எங்கோ இடையன் ஊதும் மதுவின் துளிகள்.' இப்படி அழகின் தெய்வ நடனம் காணும் கவிஞர்க்கு,

> "அவனி இதுவே இன்ப உலகம்
> அல்லல் ஏதடா?"

என்று பாடி யாடத் தோன்றிவிடுகிறது. இதுதான் முதல் 'மின்னல் பூ'.[1]

நீலவானத்திலே, கோளங்கள் நிற்கும் பேரழகு; விண் மீன்கள் கூட்டம்—இவற்றை அண்ணாந்து பார்த்து வியக்கிறார் இப்படி:[2]

> "நீலத்துப் பாழிலே கோளத்துப் பம்பரங்கள்
> தூங்கும் இசை யெழுப்பத் தூங்காத ஆட்டத்தான்
> நவக்கிரகப் பெருங் கோடி நட்சத்திரமணி உதிரப்
> பரவெளியில் வெடிவாணம்"

வானத்தை விட்டுச் சுற்றிலுமுள்ள உலகத்தை வியந்து குழந்தைபோல விரித்திட்ட கண்களுடன் நோக்குகின்றார் கவிஞர். இளவேனில் வரவுகண்டு 'மாமரக்கன்னி' புத்தெழிலுடன் பொலிவதைக் கண்டு பூரிக்கின்றார்.[3]

> "பழங்கந்தை உடைநீத்துப்
> பசுமை கொண்ட மாமரமே!
> அழகுச் சிறுகன்னி
> ஆகிவிட்ட மாயமென்ன?"

---

1. இந்நூல்—அழகு நடனம்—பக். 17.
2. இந்நூல்—என்றும் பதினாறு—பக். 21.
3. இந்நூல்—மாமரக்கன்னி—பக். 26-27.

"சென்றுவந்த துயிற்பாணன்
தீம்பாடல் கேட்டாயோ?
கேட்டவுடன் மெய்சிலிர்க்கக்
கிழட்டாடை உதிர்ந்ததுவோ?"

ஆண்டுதோறும் எழில் இளமை அடைகின்றாய்; நான் ஆண்டுதோறும் முதுமை எய்திக் கொண்டே போகிறேன். இளமை எய்தும் மந்திரத்தை எனக்குக் கூறமாட்டாயா? இதயத்திலே அன்பு நிறைகின்றபோது இளமை தானாகவே தோன்றி விடுமா?—அப்படித்தானே என்று கேட்கும் உணர்ச்சியை இப்படிக் கூறுகின்றார்!

"ஆண்டுதொறும் எழிலிளமை
அடைகின்ற மந்திரத்தை
ஈண்டெனக்குக் கூறாயோ?
இதயம் நிறை காதலதோ?"

அழகை எங்குக் கண்டாலும் போற்றிப் பூரித்துக் கூத்திடு தல் கவிஞர் இயல்பு. 'காதல் நெருப்பு' உள்ளத்தே கனன் றெரியக் காதலியின் பேரழகைக் கவியிசைக்கின்றார் இவர்.[1] எப்படி?

"தென்னம் புதுப்பாளை
மடலவிழ்ந்து நிற்பதுபோல்,
தேனிலவின் சாற்றினிலே
வடித்தெடுத்த பொன்னுருவம்
சின்னஞ் சிறியநகை
உள்ளமதைக் கிள்ளுநகை
தெய்வரம்பை வனஞ்சலடும்
வானவில்லைப் போலவந்து
வண்ணக் கிளிப்பச்சை
ஒளிர்காஞ்சிப் பட்டுடுத்தி
மகரயாழ் சுரந்தூற்றும்
இசைவடிவாய் என்றனிரு
கண்ணிமையில் நிற்கின்றாள்
காணீரோ? காணீரோ?"

என்று மகிழ்ச்சியில் திளைத்து, நமக்கும் அந்தக் கொள்ளை யழகைக் சோடிட்டுக் காட்டுகின்றார். மடலவிழ்ந்த புதுப்பாளை, புதிய நிறத்தோடு தன் அழகெலாம் விரிய நிற்பதுபோல் தன் அழகெலாம் வெளிப்பட்டுத் தோன்ற நிற்கிறாள் அவள் என்பது

1. இந்நூல்— காதல் நெருப்பு—பக். 28.

ஒரு புதிய உவமை ; அழகின் முழுமையை நாம் அறிந்து மகிழ நல்லதோர் உவமையாக அஃது உருப்பெறுகிறது.

நெஞ்சத்தில் அவள் ஆடுகின்றாளாம். அது மேலும் மனத்தே காதல் நெருப்பைத் தூண்டுகிறது. அதற்கும் ஓர் இனிய உவமை கவிஞர்க்குத் துணை வருகிறது. விளக்கத்திற்கு, தீயை அணைக்க எண்ணினால், யாராவது பஞ்சு கொண்டு அணைப்பார்களா ? அப்படி அணைக்க முற்பட்டால், அவர்க்கு என்ன பெயர் சூட்டுவது ? 'பைத்தியம்' என்றுதானே கூறலாம் ?

> "பஞ்சு கொண்டு தீயணைக்கும்
> பைத்தியத்தின் செய்கையைப்போல்"

என்கின்றார் கவிஞர்.

'வண்ணப்பதுமை' என்ற தலைப்பில் தம் எண்ணத்தை வரைகின்றார் கவிஞர். வான வில்லுக்கு மின்னல் பொடியைத் தூவி, மந்திரத்தால் சொக்க வைக்கும் மயக்கத்தைக் கூட்டித் தேன் ஒத்த கோலத்தில ஒப்பனை செய்து, சிற்பம் ஒன்று உயிர் பெற்று வந்தது எனவரும் பெண்ணழகைச் சுவை ததும்ப ஓவியம் ஆக்குகின்றார்.[1]

மழையழகில் ஈடுபட்டவாறே, சிறிய குன்று ஒன்றின் உச்சியில் நின்று உலகில் மாலை இருள் பரவுகின்ற காட்சியை நோக்குகின்றார் கவிஞர். அதன் அற்புத விளைவுதான் 'அந்தி' என்ற அருங் கவிதை.[2]

விளிம்பிலே சிவந்த கதிரவனின் கதிர்கள் ; பெரும்பகுதி இருள் இஃது அரக்குநிற முன்றானையோடு கூடிய கரும்பட்டாகக் கவிஞர்க்குத் தோன்றுகிறது.

> "அந்தி யள் கருப்பட்டு மெல்ல உடுத்துகிறாள்
> அரக்குநிற முன்றானை
> அடிவானில் மேற்கே பார் !"

உலகின் துயர அலைகள்

அழகுத் தெய்வத்திற்கு அடிபணிந்து இன்புறும் கவிஞர்க்கு உலகின் துயர அலைகள் எவ்வளவோ கவிதைகளை எழுப்பு

---

1. இந்நூல்—வண்ணப்பதுமை—பக். 102.
2. இந்நூல்—அந்தி—பக் 68.

கின்றன. இன்பத்தை அனுபவிக்கப் பழகியது போலவே துன்பத்தையும் அனுபவிக்கிறார் இவர். கண்ணீர் கலந்த புன்னகையோடு துன்பங்களை எதிர் கொள்கின்றார். எங்கோ நின்று அழுகின்ற குழந்தைக்குப் பரிகின்றது இவரது பாட்டு நெஞ்சம்.[1]

"எங்கோ ஒரு குழந்தை
என் செவியில் தீப்பாயப்
பொங்கும் துயரோடு
பொருமி அழுவதும் ஏன்?"

என்று கேட்கின்றார். 'பச்சைக் குழந்தை என்றால் எனக்கொரு பாசம் பிறக்குதம்மா' என்று பாடியவரல்லரோ இவர்?

"தாயன்பை அறியாமல்
தனிவாடும் மெல்லரும்போ?
பேயுள்ளம் படைத்தவர்கள்
பிணிக்கண்ணால் சுட்டாரோ?"

'அழுகைக்கு என்ன காரணமாகலாம்' என்று புலம்புகின்றது கவிஞருடைய கனிந்த நெஞ்சம். குழந்தையைச் 'செங்கீரை' என்கின்றார். 'பிறைப் பிஞ்சு' என்கின்றார். இளங் கீரையும் இளநிலாவும் மழலைக் குழந்தையின் தெய்விக இளமை ததும்பும் திருக்கோலத்தை அவர்க்குக் காட்டுவதுடன் நம் உள்ளத்தும் குழந்தைமையின் பேரழகை - புனித நலத்தைக் கொண்டுவந்து விடுகின்றன. பாட்டுலகிலே தமக்கென்று ஒரு புதுப் பொருளைக் கொண்டு புன்னகை செய்கின்றன 'செங்கீரை' 'பிறைப் பிஞ்சு' என்ற படைப்புக்கள்!

"தெய்வத்துச் சுடர்க்குழந்தை
சிரிப்பிழந்து முகம்வாடி
நையக்கண்டால் அந்தோ
நடுங்குகின்ற தென்னுள்ளம்"

என்று வெளிப்படையாகத் தம் அன்பின் கனிவைக் காரணமாகக் கூறி முடிக்கின்றார். இறுதியில்.

சமுதாயத்தின் கோணல்கள்

கவிஞனின் கண்களுக்குச் சமுதாயத்தின் கோணல்கள் தென்படாமற் போகமாட்டா. வெறும் மகிழ்ச்சியும் கூத்தும்

---

1. இந்நூல்—எங்கோ ஒரு குழந்தை—பக். 108.

நிறைந்த அழகுக் காட்சி மட்டுமே விழுமிய கண்களுக்குப் புலப்பட மாட்டா. இருண்ட பகுதிகளிலும் அவன் ஊடுருவிப் பார்க்கின்றான்; உணர்ந்து கனிகின்றான்; கசிகின்றான். ஆம்; கோணலைச் சுட்டிக் காட்டிக் கண்ணொளியால் சுட்டுவிடுகின்றான். செல்வம் விளையாடும் நகர்ப்புறத்து நாற்சந்தி ஒன்றிலே, கையிலே குழந்தையோடு கண்ணீர் பெருக்கி நிற்கும் ஒரு பெண்ணை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்: 'கண்ணில்லாமலே' என்ற கவிதை.[1] உள்ள நிலையை ஒளியாமற் காட்டும் ஓர் ஆன்மீகப் படப்பிடிப்பு. அறக்கடவுளுக்குப் பாவலர் கேட்கும் வினாக்குறி. கண்ணில்லாமலே கோலே கண்ணாக,

"பண்ணிய பாவமோ? படைத்தவன் கோபமோ?
என்னவோ தெரியேன் இக்கதி யானேன்"

என்று அக் குருட்டுப் பெண்ணின் குரலுக்கு வடிவம் தருகின்றார். 'அன்னை ஆதிபராசக்தியின்' பெண்மை வடிவம்; கசடனும் எவனோ மையலே காட்டி மயக்கியே பசப்பிப் "பேயாம் காமப் பெருந்தீச் சுட்டநால் நாய்போல் உடலை நச்சினன் தந்தது—" பாவையின் இடுப்பில் பாவச்சின்னமாய் இருக்கும் குழந்தை என்று சீறுகின்றார். காசைத் தூசாக மதிக்கும் பட்டினத்து நாகரிகம் அந்தப் பெண்ணைக் குறித்து இரங்கவும் நேரம் இல்லாது பரபரப்பது கவிஞர்க்கு வெகுளியை விளைக்கின்றது. 'இருதயம் இல்லாப் பட்டினம்' என்று அடைமொழி தந்து இயந்திர வாழ்வை இடித்துரையாடுகின்றார். ஓர் அபலைப் பெண்ணிற்காகப் பரிந்து வாதாடும் கவிஞர் போக்கு, ஓர் எளிய ஆட்டுக் குட்டிக்காக வாதாடிய புத்தரின் போக்கினுடன் ஒன்றுபடுகின்றது; கனிவின் மலர்ச்சியே இதன் விளைவு அன்றோ?

முதிர்ந்த கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட இளம் பெண்களுக்குக் கண்ணீர் வடிக்கும் உயர்ந்த உள்ளத்தையே 'இளமான்' எழுதிக்காட்டுகிறது.[2] துள்ளிக் குதிக்கும் மான்குட்டி போன்ற உள்ளமாம் அவள் கொண்டது. ஆனால், பிணிக்கப்பட்டுவிட்டதாம் இப்போது. அந்தக் காலை ஒடித்துவிட்டாளாம் அவள்.

"ஒளியறியாப் பகற்போதாய்,
ஊற்றில்லாப் பாழ்ங் கிணறாய்,
தருவுதுக்கா மணற்பாழாய்,
தண்மையிலாக் கருநிலவாய்"

உள்ளாளாம் அந்த ஒள்ளிழையாள்.

1. இந்நூல்—கண்ணில்லாமலே—பக். 19.
2. இந்நூல்—இளமான்—பக். 66.

"சிறகிழந்த இளம்புறவைச்
செந்தீயில் இட்டது போல்
சிறுதாலித் தளையிட்டுச்
சிறையிந்த மனைவைத்தார்"

என்று கண்ணீர் வடிக்கின்ருள் அந்த அணங்கு.

"மணத் தறிபால் எனைக்கட்டி
வாழ்வொடித்தார் கிழக்குறட்டை
வாய்தெறிக்கத் தூங்கிடுவார்
மனந்தெறிக்க இரவெல்லாம்
தனிக்கிடந்து நான்உழலத்
தம்முறக்கக் கொடுமையிலும்
தளராமல் அரைச்கண்ணைத்
தான்திறந்து பார்த்திருப்பார்"

என்ற வரிகள், முதுமைக் கணவனது செயலற்ற உள்ளத்தே சிறுமையாம் ஐயம் செழித்துக் கிடக்கும் கீழ்மையினைக் கோடிட்டுக்காட்டி இளம்பெண்ணின் ஏக்கக் கனவுகளைத் தொட்டுக் காட்டிப் பெருமூச்சு விடுகின்றன.

வாழ்கின்ற காலத்தே பாராட்டுச் செய்யாமல், கண்ணெடுத்தும் பாராமல் செத்த பின்பு சீராட்டுகின்ற பிற்போக்குச் சமுதாயத்தினைக் குத்திக் காட்டுகின்றது 'நமதுவழி';[1] இஃது ஒரு புதிய யாப்பு முயற்சி, வசன கவிதையாக—உணர்ச்சி குமிழியிட—உண்மையை உள்ளத்தின் செவிகளுக்கு மிக நெருங்கி வந்து உரைக்கிறது இக் கவிதைப் பூ.

"பாடிய பாட்டுகளில் அவன் இருக்கிறுன்,
ஆனல் அவன் பாடாது சென்ற பாடல்களிலும்
இருக்கிறுன்.
இதை யாரும் உணர வில்லை,
அவன் பாடியவை பல,
அவன் பாடாதவை மிகப்பல"

என்று முடிகின்ற இக் கவிதையின் இறுதிப் பகுதி 'நமது வழி' யின் கீழ்மையைச் சுட்டிக்காட்டுவதுடன் அக் கவிஞனுடைய நிலைபேற்றை விளக்குகின்றது. சமுதாயத்தின் நிமிர்க்க முடியாத இந்தக் கோணலை ஆசிரியர் கூறியிருக்கும் கோணம் புதியது; சுவையுடையது; உறுதியானது.

---

1. இந்நூல்—நமது வழி—பக். 64.

தழுவல் அமைப்பு

சீதக்காதியைப் பற்றிய பாடல்,[1] மில்டனைப் பற்றிய தலை சிறந்த பாட்டினை நினைவூட்டுகின்றது. செர்மனி, சீனு, பிரான்சு நாட்டுக் கவிதைகள் சிலவற்றைத் தழுவிய கவிதைகளும் இத் தொகுப்பில் நின்று சிந்தனை விருந்து படைக்கின்றன.[2]

இறைவன் திருமுன்

இறைவனின் திருக்கோயிலிற்குள் செல்ல இன்னார் இனியார் என்னுது எல்லார்க்கும் உரிமை உண்டு: அங்கே வேற்றுமை பாராட்டுதல் அறிவுடைமையாகாது என்று விளக்குகிறது "பித்து";[3] இதுவும் ஒரு புதிய யாப்பு முயற்சியே.

"தாயின் கோயிலில்
தாழ்ந்தோன் நுழைவதோ !
அரைக் காசில்லை ;
தாயின் திருமுன்
போவதா அவனு ! ?"

என்ற கேள்விகள் சமுதாயக் கோணற்புத்தி உடையார்க்கு விடுக்கப்படும் கூரிய கணைகள். தூய அன்பு கொண்ட உயிர்களுக்கு அன்னை எங்கும் காட்சிதரக் காத்திருக்கும் பெருங் கருணை,—கோயிலினின்று அடித்துத் துரத்தப்பட்டுச் சுடுகாட்டிற்கிடந்த அவனுக்குக் கிட்டிய அற்புதத்தைப் பாடுகிருர் இவர்.

"அன்னைதன் மடியினில்
தன்சிரம் தாங்கிடக்
கண்டனன் காணுக்
காட்சியும் கண்டான்"

என்ற வரிகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

தேசிய உணர்வு

காந்தி அண்ணல், சுதந்திரத் திருநாள், அடியடா முரசம், சிம்மநாதம் செய்யடா ஆகியன தேசிய உணர்ச்சி ததும்பி ஒளி விரிக்கும் மின்னல் பூக்கள்.[4]

---

1. (i) *இந்நூல—சீதக்காதி—பக். 84.*
   (ii) "Milton thou should'st be living at this hour"

2. *இந்நூல்—காதல்—பக். 56; குதிரைவீரன்—பக். 70; பெற்ற மனம்—பக். 80.*

3. *இந்நூல்—பித்து—பக். 90.*

4. *இந்நூல்—பக். 41, 47, 71, 76.*

சமுதாயத்திற்கு நெறிகாட்டும் நலம்

ஒரு தாய் குழந்தைக்கு அறிவுரை சொல்லக் கடமைப் பட்டவள். கவிஞர்கள் ஒருவகையில் நாட்டிற்குத் தாயர்களே. அவர்கள் சமுதாயக் குழந்தைகட்கு அவ்வப்போது அறிவுரை கூறி நெறிகாட்டத் தக்கவர்கள். ''வாழ்க்கையிலே வெற்றி பெறுவதற்கு வேண்டிய நல்ல வாய்ப்பு நம் முன்னே 'பாராசாரி' போல நிற்கிறது. அதன் பிடர்பிடித்து உந்தித் துணிவோடு செயலாற்றுகிறவன் புகழ் பெறுகிறான். அன்னை முகம் நோக்கும் பிள்ளையைப் போலப் பிறரை எதிர்பார்த்து நிற்பவன் வாழ்க்கை யிலே தோல்வி அடைகிறான்'' இதன் வடிவமே 'பாராசாரி' யாகப் படர்ந்து ஒளிகாட்டுகிறது.[1] 'உள்ளந் தளராதே' மனித சமுதாயத்திற்கு வீரமும் உற்சாகமும் தரும் மருந்துப் பாட்டு.[2] 'நம்பிக்கை' பொறுமையைக் கடைப்பிடிக்கத் தூண்டும் புனிதப்பாட்டு.[3] 'இன்றும் நேற்றாய்' குறிக்கோளைத் தூண்டும் குறிப்புடைப்பாட்டு.[4]

காண விழையும் உலகு

கவிஞர்கள் காண விரும்பும் புதிய உலகம் தனிச் சிறப் புடையது. அதனை அவர்கள் ஆங்காங்குச் சுட்டிக்காட்டித் தம் ஆவலை நிறைவு செய்துகொள்வர். 'வேண்டும்', 'தருவாய்' என்ற இரண்டு மின்னல் பூக்களும் கவிஞரின் விழைவுக்கு வடிவம் கொடுக்கும் கனவுப் பூக்கள்;[5]

> ''மேலுக்கும் மேலான
> 　　மேலிடத்தே தோன்றும்
> காலத்தை வென்றதொரு
> 　　கவிஎனக்கே தருவாய்''

ஆம்; கவிஞரின் வேண்டுகோள் கைகூடிவிட்டது. 'காலத்தை வென்றதொரு கவி' மின்னல் பூவாய் மலர்ந்து விட்டது. அதன் மணத்தில் வையகம் என்றும் இன்புறும்.

---

1. இந்நூல்—பாராசாரி—பக். 104.
2. இந்நூல்—உள்ளம் தளராதே—பக். 88.
3. இந்நூல்—நம்பிக்கை—பக். 38.
4. இந்நூல்—இன்றும் நேற்றாய்—பக். 58.
5. இந்நூல்—வேண்டும் - பக். 63. தருவாய்—பக். 35.

நாவலர் பாரதியார் தம் மருமகனுரைத் தடுத்தாட்கொண்டது

To
M. R. Ry. L. Krishnaswamy
Bharathi, M A., B L.,
Advocate, Madurai.

Annamalai University
Annamalainagar
27/3/1934

My Dear Mapillai,

நலம். கடிதம் வந்தது. Dr. ராஜனவர்களின் விரு, நானும் தக்க அந்தணரல்லாதாரொருவரைச் சொல்லக்கூடவில்லை எனக் கரிசாற்றுங் கருத்தே நுதலினதாக உணர்ந்துளேன். தாம் விரும்பின் இப்பதவி தானே வரும். தேச சேவை பாராட்டத் தக்கதே. எனினும், உமது வயது, நிலை, குடும்ப அவசியம், சுற்றத்தாரின் தேவையும் விருப்பங்களும், இவை பலவும் ஊன்றிச் சிந்தித்தே இதுவகையில் முடிவு செயற்பாற்று. தமதிளமையையும், குடிக்கும், உற்றோருக்கும், உமக்குமே நீர் செய்ய வேண்டுவனவும் உம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றனவும் பலப்பலவாம். அறிவு, திரு, ஆற்றல்கள் உள்ளன கருதித் "தம்மொடு கொள்ளாத கொள்ளாதுலகு" என்பதையும் நினைத்துச் சூழ்க. தற்போது தேச சேவைக்கென்றே உலக வாழ்வை அறவே துறப்பது அறிவுடைமைக்கழகாமா? விடாது இன்னும் சிலபல வாண்டு தாளாற்றி வேளாண்மை செய்து கடனாற்றிப் பின் பிறிது வழிச் சேறல் முறைமையாமன்றோ? இடையறாது முயன்று கருமமே கண்ணாயினார் நிலைநின்று பொருளாக்கி, அந்நிலையில் கூடியவரை தேசசேவையுமுடனாற்றுவதே முதலில் பொருத்தமும் பயனுமொருங்குடையதாமெனக் கருதுகின்றேன்.

அன்றியும், தற்போது தொழிலை விடுவது பிறகு எஞ்ஞான்றும் மீதில் நுழைதற்கு இடம் தராது. பலமரம் கண்ட தச்சன் போன்று வாழ்வில் நிலைத்தன்மை கடைப்பிடியாததன் தவறு தரும் தீவினைவுகளை எண்ணி, உருள்கல்லாகாமல் கருத்தொருப்பட்ட ஊக்கத்தோடு பணையறமாற்றுவதில், உமது தேசபக்திக்கு எவ்விதக் குறையுமின்றே. *A. V. அவர்கள் போன்றவர்நிலை பாராட்டத் தக்கதன்றோ? மேலும் நமது தற்காலத் தலைவர்கள், அதிலும் தமிழகத்தாரை நம்பியிறங்குவது எனைத்தாகுமென்பது நான் சொல்லி நீரறிய வேண்டியதுமில்லையே? நட்டாற்றில் கைவிடுவர். பிறத நமக்கு மனஞ்சலிக்கும். இளமையில் பிறர் நொதுமலும் பகையும் நேராது முன்னறிந்து விலக்கலே அறிவுடைமையாகும். யாரையும் எதிலும் எனைத்தும் எதிர்பாராமலே நீர் தனியே நின்று என்றும் தேச சேவைத்துறைகளில் உழைத்து வரத் தற்காலநிலை கருதின் இடம் தராதென்று அஞ்சுகிறேன். தலைவர் பலரோடும் நெருங்கிப் பழகிய உமக்கு விரித்து விவகரித்தல் மிகை. நமது நாட்டவரும் உண்மை நேர்மை

*மதுரை வழக்கறிஞர் வைத்தியநாதையர்.

களை உவந்து பாராட்டுபவருமில்லையே? மதிப்பாரும் அனுதாபத்துடன் துணைபுரிவாருமில்லாமல் மனம் சலிப்பும் கசப்புமடைதல் இயல்பேயாகும். எல்லாம் சீர்தூக்கி நோக்க என் சொந்த அபிப்பிராயம் தாம் தற்போது தன்னையே நம்பிப் பிறரையும் பிற கருமமெதனையும் கருதாமல் கடனுற்றும் மனையறனிலே ஒன்றே ஒருவந் தங் கருதி நின்று தாளாற்றிப் பொருளொடு புகழாக்கி வேளாண்மை எல்லாம் முறையாற்ற முயலுவதே நல்லநெறி என்பதுவேயாகும். இதற்குமேல் நான் சொல்லற்குரியதில்லை. தாம் எல்லாம் தம் மனைவியுடன் ஆழ்ந்து சூழ்ந்து, எண்ணித் துணிக. பின் அலமரல் பேதுறுக்கும். துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு.

*ஹரிஜன சேவாசங்கம் இரண்டிலொன்று கழிந்து ஒன்றே மீதியுளது. அன்றியும், தலைவர்கள் தம் தயவை எதிர்பார்ப்பவரைத் தாம் மதிப்பாருமல்லர். பிறகு தமது முடிவு எதுவாயினும் எம்மனோர் அனுதாபமுமதுவேயாகும். பூரியார் பிற்செயலை எதிர்பார்த்து வேண்டுவன செய்வேன். 31—3—34ல் இங்கு Syndicate கூட்டம். 1—4—34ல் சென்னை சென்று இளசை மன்னரைக் கண்டு அங்கிருந்து திரும்பவந்து 3/4ல் புறப்பட்டு 4/4 காலை அவ்விடம் வருவேன். என்பது பசுமலையிலும் தகவல் தருக.

குழந்தைகளைக் கவனித்திடுக. பிறபின்.

(Sd.) S. S. Bharati.

குறிப்பு :

தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல். அவர்கள் தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளார் மாண்புமிகு மாணவராவர். வழக்கறிஞரா யிருந்து பெரும்பொருளீட்டியவர். தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றுப் பேரறிஞராக விளங்கியமையினால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகள் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் அமர்ந்து புகழ் பெற்றார்.

1939 இல் மதிப்புக்குரிய இராஜாஜி சென்னை மாநில முதலமைச்சரானபோது வடநாட்டு இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கினார். அப்போது டாக்டர் நாவலர் பாரதியார் அவர்கள் பேச்சாலும் எழுத்தாலும் அத் தீய திட்டத்தை ஒழிப்பதற்குப் பாடுபட்டனர். An Open Letter to C. Rajagopalachariar என்ற கடிதத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுப் பரப்பும்படி என்னிடம் கொடுத்தனர்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் நாவலர் பாரதியாரவர்கட்கு மிக்க ஆர்வம் உண்டெனினும் தமிழ் நாட்டின் ஒரு சாரார்

---

* ஹரிஜன சேவா சங்கம் இரண்டிலொன்று கழிந்து ஒன்றே மீதியுளது என்பது சில உண்மைகளை ஊகமாக உணர்த்துஞ் செய்தி.

நலங் கருதும் அரசியல் சூழ்நிலை காரணமாக அதில் ஈடுபட அவர்கள் விரும்பவில்லை.

அவர்கள் தம் அருமைத் திருமகளார் திருவாட்டி இலட்சுமி யம்மையார் மனத்திற்கினிய மாண்புடைக் கணவனார் திரு கிருட்டிணசாமி பாரதியார் (எம்.ஏ., பி.எல்.) அவர்கள் மதுரையில் வழக்கறிஞராக உண்மையுடனும் நேர்மையுடனும் பணியாற்றிப் புகழுடன் பெரும்பொருள் ஈட்டி வந்தார். கணவரும் மனைவியாரும் சட்டப் பேரவையில் ஒரே காலத்தில் உறுப்பினர்களாக இருந்தமை அவர்கட்கே யுரிய தனிப் பெருமையாகும்.

திரு கிருட்டிணசாமி பாரதி யவர்கள் இந்திய அரசியல் சட்ட அமைப்புக் குழுவிலும் ஓர் உறுப்பினராக விருந்து பணி யாற்றியதும் போற்றுதற்குரியது. திரு பாரதியாரவர்கள் மதிப் புடன் தாம் ஆற்றி வந்த வழக்கறிஞர் பணியை உதறித் தள்ளி விட்டு 1934 இல் விறுவிறுப்புடன் நடைபெற்ற நாட்டு விடுதலை இயக்கத்திலே குதிப்பதற்கு முனைந்தனர்.

அவ்வமயம் அவர் பெருமதிப்புக்கும் பேரன்பிற்குமுரிய பேரறிஞர் தம் மாமனார் உயர்திரு டாக்டர் நாவலர் சோமசுந்தரப் பாரதியாரவர்கள் தம் அருமை மருமகனுக்குத் தம்மைச் சார்ந்து நிற்பவர்களை விட்டுவிட்டு விடுதலை இயக்கத்தில் இறங்குவது நம்மனோர்க்குப் பொருந்துவதன்று என்று இடித் துரைத்து உணர்த்தும் வகையில் எழுதிய உயர்ந்த இலக்கிய நடையில் அமைந்துள்ள கடிதம் ஆகும் இது. இது பொதுவாகத் தமிழ் மக்கட்கு நாட்டின் நிலையினை எடுத்துக் கூறும் அறிவுரைக் கடிதமுமாகும்.

14—12—1959 இல் இறையடி சேர்ந்த கணக்காயர் நாவலர் பாரதியாரவர்கள் நினைவு விழாவை 17—2—1960 இல் இராஜாஜி மண்டபத்திலே நமது கழகம் நடத்தியது. மாண்பு மிகு கல்வி நிதி யமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கிக் கழகம் வெளியிட்ட 'நாவலர் பாரதியார்' என்ற வரலாற்று நூலை வெளியிட்டுப் பாராட்டிப் பேசினர்.

செட்டி நாட்டு அரசர் டாக்டர் எம். ஏ. முத்தைய செட்டியா ரவர்கள் நாவலர் பாரதியார் அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து நாவலரவர்களின் அறிவுத் திறனையும் பண் பாட்டினையும் பற்றிப் பேசியதோடு கழகத் தொண்டைப் பற்றியும் புகழ்ந்து பேசினர்.

———

வ. சு.

முத்தமிழ்மணி வித்துவான்
மு. அருணாசலம் பிள்ளையவர்களின்
வாழ்க்கைக் குறிப்பு
(26-3-1903 — 24-4-1973)

சிவநெறியும் செந்தமிழும் ஒருங்கே வளரும் தென் பாண்டி நாட்டு நெல்லை மாவட்டத்தைச் சார்ந்ததும், சங்கரநயினார் கோவில் வட்டத்திலுள்ளதும், சிவகிரிச் சமீனைச் சேர்ந்ததும் ஆகிய இராயகிரியென்னும் ஊரே மு. அருணாசலம் பிள்ளை பிறந்த ஊர். சோழிய வேளாள மரபினரான இவர் முன்னோர் நெல்லை மாவட்டத்துச் சிற்றரசர்களின் அவைக்களத்துப் புலவர்களாக அமர்ந்து அழகுறுத்தினார்களாதலின் புலவரெனப்படுவர்.



நகரம், செவற்குளம், மலையடிக் குறிச்சி, ஊற்றுமலை, சேற்றூர், இராயகிரி, சிவகிரி, பூழியன்குடி யாகியஊர்களில் இம்மரபினர் வாழ்ந்து வந்தனர்.

செவற்குளம் கந்தசாமிக் கவிராயர், நகரம் முத்துசாமிக் கவிராயர், அவர் மைந்தர் கந்தசாமிக் கவிராயர் என்போர் முத்தமிழிலும் வல்லுநர். இவருள் முன்னையவர் ஊற்றுமலையவைக்களத்தைச் சிறப்பித்தவர். பின்னையவர் எட்டையபுரத்து அவைக்களத்தை அழகுறுத்தியவர். இவ்விரு கந்தசாமிக் கவிராயரும் அருணாசலம் பிள்ளைக்குப் பெரிய தந்தை முறையினர். பூழியன்குடி முத்துவீறுக் கவிராயர் சிங்கம்பட்டியைச் சிறப்பித்தவர். இவர் மாமன் முறையினர். கணபதிக் கவிராயர் என்பார் சேற்றூர் மன்னரைச் சேர்ந்து வாழ்ந்தவர். இவர்தாமும் மு. அ. அவர்கட்கு மாமன் முறையினரே. இம்மரபின் ஏனையோர் நாட்டு மருத்துவம், சோதிடம் போன்றவற்றில் மிகத் தேர்ச்சி பெற்று அரண்மனைச் சார்பிலேயே வாழ்வு கொண்டனர்.

அருணாசலம் பிள்ளையின் தந்தையார் முத்துப்பிள்ளையாவார். தாயார் செல்லம்மை யென்பார். இப் பெற்றோர்க்கு வாய்த்த நன்மக்கள் மூவரும் ஆடவரே. இவருள் அருணாசலம் பிள்ளை மூத்தவர். தந்தையாரான முத்துப்பிள்ளை கல்வி யறிவிற் குறைந்தவரே யெனினும் நுண்மாணுழைபுல மிக்கவர்; வழக்குப்

பேசித் தீர்ப்பதில் ஒரு மாவட்ட நடுவர்க்குள்ள திறமை படைத் தவர். தம் தங்கையரையும், தம்பியையும் நல்வாழ்வு வாழச் செய்த சான்றோர். தந்நலமே கருதாதவர். அத் தந்தை யாரின் இயற்கை யறிவு மைந்தரான அருணசலம் பிள்ளைக்கும் வாய்த்தது. மிக இளமையிலேயே இவர் தாயார் காலமானதால் மக்களுக்காகத் தந்தையார் மறுமணம் செய்து கொண்டனர்.

நடுப்பிறந்த தம்பி கந்தசாமி பிள்ளை யென்பார் இன்னிசைத் துறையிலும் கடைப்பிறந்த தம்பி செல்லையா பிள்ளை யென்பார் தொடக்கநிலை யாசிரியராய்ச் சோதிடத் துறை யிலும் தேர்ச்சி பெற்றவர்கள். இவரிருவரும் முறையே முப்பதாண்டுக்கும் ஐந்தாண்டுக்கு முன்னரே காலமாயினர். அருணசலம் பிள்ளை இளமையிலே தம் சிறிய தந்தையாரும், வேளாள புராணம் பாடின வீராய்ச்சி மங்கலம் கந்தசாமிக் கவிராயர் மாணவரும், பன்னெடுங்காலமாக இலக்குவ நாயக்கன் பட்டி துரைசாமிக் கவுண்டர் போன்ற பெருமக்களின் உறு துணையால் கொங்குநாட்டுத் தாராபுரம் பகுதியில் தமிழ்ப்பணி புரிந்தவருமான அருணசலக் கவிராயர் அவர்கள் இலக்கண இலக்கியங் கற்பிக்க முறையாகக் கற்றுவந்தனர். அச்சிறிய தந்தையார் கற்பித்த கல்வியே அடிப்படையாக அமைந்து அருணசலம் பிள்ளையைப் புலவருலகத்தில் உயர்த்தியது.

பின்னர்ப் புதுக்கோட்டைத் தனியரசைச் சார்ந்த மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையை யொட்டிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து இரண்டாண்டுகள் முறை யாகப் பயின்றனர். வ. பழ. சா பழநியப்ப செட்டியாரும், அவர்தம் அருமை இளவலார் அண்ணமலைச் செட்டியாருமாகிய, நகரத்தார் பெருமக்கள் இருவரும் பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் தொடங்கினதுமே தம் ஊரில் (மேலைச்சிவபுரியில்) மேற்குறித்த செந்தமிழ்க் கல்லூரியை நிறுவிச் செட்டிநாட்டுப் பகுதியில் தமிழ் வளர்க்க லாயினர். தேவரவர்களைப் பின்பற்றியே மாணவர்க்கெல்லாம் உண்டியும் உறையுளும் வழங்கினர். பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கல்லூரிக்குச் செவிலித் தாயாயினர். இலக்கண நிறைகடல் கந்தசாமியார், ஆசிரியரரசு பூவராகவன் பிள்ளை, அறிவுப் பெருங்குன்று அமிர்தலிங்கம் பிள்ளை போன்றோர் அடுத்தடுத்து அக்கல்லூரியாசிரியராக அமைந் தனர். அருணசலம் பிள்ளை இவர்களிற் சிலரிடம் பயின்று பண்டிதமணி யவர்கள் தொடர்பு கொண்டார். செய்யுளியற்றுந் திறமை, பாடம் சொல்லுமுறை, பிற நல்லாசிரியர்க்குரிய தகுதி யென்பன அருணசலம் பிள்ளை பெற்றிருந்ததால் பண்டிதமணி

போன்ருேர் விருப்பத்திற்கேற்பத் தாம் பயின்ற இடத்திலேயே ஆருண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தனர்.

பண்டிதமணி யவர்கள் உதவியால் கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தலைமையாசிரியர் யாவருமே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்களாகச் செல்வது மரபாக இருந்தது. பல்கலைக்கழகமாகிய கப்பலைச் சேர இக் கல்லூரி படகாக அமைந்தது. அருணுசலம் பிள்ளையும் தமிழ் விரிவுரையாள ராகச் சென்று இருபத்து மூன்ருண்டுகள் பணி புரிந்தனர். விபுலாநந்தஅடிகள், நாவலர், ச. சோமசுந்தர பாரதியார், மகாவித்துவான் இராகவையங்கார், சர்க்கரை இராமசாமிப் புலவர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை, தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை போன்ற பெரு மக்கள் தொடர்பு கொண்டு செந்தமிழ்ப் புலமை நடாத்தினர். துணைப் பேராசிரியராக உயர்த்தப்பெற்று இறுதி ஒன்ப தாண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், யாழ்ப்பாணம் ஆ. தி. பா. வி. சங்கத்திலும் பல ஆண்டுகள் தேர்தல் அதிகாரியாக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் வித்துவான் தேர்வு நடத்தும் அதிகாரி களுள் ஒருவராக ஐந்து ஆண்டுகள் இருந்தார்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இன்றர், பி.ஏ., பி.ஏ. ஆனர்சு., பி.ஓ எல்., எம்.ஓ.எல்., புலவர், சங்கீத பூஷணம் ஆகிய இத் தேர்வுகளுக்கு மூன்றுமுறை 9 ஆண்டுகள் தேர்வு நடத்தும் அதிகாரியாக இருந்தார். மேலும் 1953 முதல் 3 ஆண்டுகள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சட்டமன்றம் (செனட்சபை) கல்விக் கழகம், பாடநூல் திட்டக் குழு, கீழ்த் திசைக் கலைத்துறைத் தொகுதித் தலைவரைத் தெரிந்தெடுக்கும் குழு (ஃபாக்கல்டி) ஆகிய இவற்றில் உறுப்பினராக இருந்தார்.

நகரத்தார்கள் அமைத்த கல்லூரியிற் பயின்று, நகரத்தார் பெருமகனுரான பண்டிதமணி யவர்கள் அன்புக்குரியவராகி முதன்மை பெற்று வந்த அருணுசலம் பிள்ளைக்கு மற்றுமொரு நகரத்தார் குலத்துப் பேரறிஞரான பண்டித, வித்துவான், பேராசிரியர் திரு லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர் களின் உதவியும் அன்பும் பண்டிதமணிக்குப்பின் தொடர்ந்து கிடைத்தன. ஆசிரியப் பணிக்கு இடையில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் இறுதிநிலைத் தேர்வு (1939 இல்) எழுதி மாகாணத்திலேயே முதன்மையாகத் தேறி ஆயிரம் வெண்பொன் பரிசு பெற்றனர். இவர் தம் தம்பி மக்களை அழைத்துச் சென்று பல்கலைக்கழகத்தில் சேர்த்து, எம்.ஏ.,

பி.எஸ்ஸி., வித்துவான் போன்ற பட்டப்படிப்பெல்லாம் பெற உதவினர். மதுரை, முகவை, நெல்லை, குமரியாகிய தென் மாவட்ட மாணவ, மாணவியர்க்குப் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கும் வரை உணவும் உறையுளும் கொடுத்து உதவி வந்துள்ளனர்.

தமிழிசைக் கிளர்ச்சி தமிழகத்தில் தலைதூக்கி நின்ற அந் நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் தமிழிசை நூல்கள் வெளிவருதற்கு அருணாசலம் பிள்ளை பேருதவி புரிந் துள்ளனர். பல பகுதிகளிலுமிருந்து கிடைத்த தமிழிசைப் பாடல்களை யாராய்ந்து செம்மைப் படுத்தி, இசைத்துறை யறிஞர்களுடன் இசைந்து பண்ணமைத்தும், தாமே பல பண் களின் இசைப் பாடல்களை இயற்றிக் கொடுத்தும் இசையுலகில் நிலவிய வறட்சியைப் போக்கினர். பழம் பாடல்களைத் திருத்தி யும். குறிப்புகள், இயல் இசை ஆசிரியர்களின் வரலாறுகள் முதலியன எழுதியும், பல தமிழிசைப் பாடல் தொகுதிகள் வெளிவர உதவி செய்தார்.

செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், சித்தாந்தம், ஞான சம்பந்தம் முதலான திங்கள் ஏடுகளில் இலக்கணம், இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல இவரால் எழுதி வெளியிடப் பட்டுள்ளன. 1966 இல் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்று மதுரைச் சோமசுந்தரபுரங் குடி யிருப்பில், கம்பர் தெருவில் தாம் அமைத்த இல்லத்தில் வாழ்ந்து வந்தனர். பல்கலைக் கழகத்து உதவிக் குழுவின் துணையால் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டுகள் தொடர்ந்து தொல்காப்பியப் பொருளதிகாரத்து அகத்திணை புறத்திணை யியல்களுக்குச் சிறந்த ஆராய்ச்சி விரிவுரை இவர் எழுதிக் கொடுத்துள்ளனர். அஃது அச்சேறி வெளிவருமாயின் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் நன்கு பயன்படும்.

புலத்துறை முற்றிய பலர்க்கு ஆசிரியராயிருந்த பெருமை மு. அருணாசலம் பிள்ளைக்கு உண்டு. மாண்புமிகு அமைச்சர் களான நாவலர் திரு இரா. நெடுஞ்செழியனவர்களும், பேராசிரியர் திரு க. அன்பழகனவர்களும் இவர்பாலும் பயின்ற வர்கள். அவைத் தலைவரா யிருந்த திரு மதியழகனவர்களும் இவர்க்கு ஒருகாலம் மாணவரே. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், பேராசிரியர்களான திரு. பூ. ஆலாலசுந்தரச் செட்டியார், திரு க. வெள்ளைவாரணனார், டாக்டர் வ. சுப. மாணிக்கஞ் செட்டியார் போன்றோர் அண்ணாமலை நகரில் இவர் பாலுங் கற்றவர்களே சிதம்பரம் வார வழிபாட்டுக் கழகத் தலைவராயிருந்து மு. அ. தெருவெல்லாம் தேவார திருவாசகம்

முழக்கினர். தமிழகப் புலவர்குழு வுறுப்பினராக இருந்து இவர் சிறப்பித்துள்ளார். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையார், தமது கணேசர் செந்தமிழ்க் கல்லூரிப் பெருவிழாவான வெள்ளி விழாவில் பொன்னுடை போர்த்திப் பொற்பூச் சூட்டி 'முத்தமிழ் மணி' என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கிச் சிறப்பித்தனர்.

21—8—1955 இல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நமது கழகம் நடத்திய ஐங்குறுநூறு மாநாட்டில் 'நெய்தல் திணை'யைப் பற்றித் திரு பிள்ளை யவர்கள் பேசியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அருணசலம் பிள்ளை சிவநெறி மறவாச் செம்மையார்; திருநீற்றில் ஆழ்ந்த பற்றுடையவர். திருத்தொண்டர் புராணம், தேவாரம், திருவாசகம், சிவஞானபோத மாகிய சிவநெறி நூல்களில் அழுந்திய புலமையாளர்; ஈகையும், இரக்கமும், அன்பும், பண்பும், அடக்கமும், ஒழுக்கமும், சுற்றந் தழுவலும், விருந்தினர்ப் பேணலும் ஆகிய இயல்புகளெல்லாம் மு. அ. விடம் குடிகொண்டிருந்தன. இவ்வியல்புகளில் இவர் சிறந்திருந்தமைக்குப் பேருதவி புரிந்தவர் இவர் வாழ்க்கைத் துணைவியாரான வடிவம்மையாராவார். இவ்வம்மையார் மு. அ. அவர்களுக்கு அத்தை மகளாங் கேண்மையுடையார். அருணசலம் பிள்ளை தம் அடுத்த தம்பியின் மூத்த மைந்தரான முத்துசாமி யென்பவரை எம்.ஏ., படிப்பித்து வளர்ப்புமகனாகக் கொண்டு மணமுடிப்பித்து வாழ்வித்தனர். மனைவியாரும், மகனும், மருமகளும், பேரர், பேர்த்தியரும் இன்று நல்வாழ்வு வாழ்கின்றனர். ஓய்வு பெற்ற பின்னரும் நல்வாழ்வு வாழ்ந்து வந்த அருணசலம் பிள்ளை 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் பிற்பகல் 3-30 மணிக்குத் தேவார திருவாசக முழக்கத்திற்கிடையே கூத்தரசர் திருவடியிற் கூடி யின்ப முற்றனர்.

—மீ. கந்தசாமிப் புலவர்

மு. அருணசலம் பிள்ளை அவர்கள் எழுதியனுப்பிய திருவள்ளுவ மாலை

மக்களெலாம் நன்மக்க ளாய்வாழ வானுலகும்
தக்கவா றெய்தத் தகையின்றி— மிக்குணபம்
கொள்ள விதிவிலக்குக் கூறுந் திருக்குறள்செய்
வள்ளுவனார்க் குண்டோ வுலகம் மாறு.

அப்பாலாய் நிற்ப தருளார் சிவநெறியாம்
முப்பால் மொழியுணர்த்தும் மூதறிவாம்—தப்பாத்
தமிழர்தம் தொன்னெறிய தான்வள் ளுவர்க்காம்
அமிழ்தாம் அனைவர்க்கும் அஃது.

—கழகத் திருவள்ளுவர் நினைவு மலர், பக்-௯௪

தாமரைச் செல்வர்
திரு வ. சுப்பையா பிள்ளை அவர்களின்
பவள விழா

கழக ஆட்சியாளர், திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் 75ஆவது அகவை நிறைவு விழா 'பவள விழா'வாக வருகிற ஆகஃச்டுத் திங்கள் 4, 5 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாள்களிலும் சென்னை, மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பெறும்.

தமிழுக்கும் சைவத்திற்கும் ஓவாது உறுபணியாற்றிவரும் ஆட்சியாளர் அவர்கள் தமிழ்ப் புத்தக வெளியீட்டுலகில் தலைசிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் ஆட்சியின் கீழுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்று தமிழ் வெளியீட்டு நிலையம் இதற்கு முன்னர்த் தோன்றியதில்லை. இனித் தோன்றும் என்பது ஐயமே.

ஐம்பதாண்டுக் காலத்தில் மேனாட்டாரும் போற்றும் வகையில் கண்ணைக் கவரும் கட்டட அமைப்போடு ஆயிரத்து ஐநூற்றுக்கு மேற்பட்ட அரிய தமிழ் நூல்களை வெளியிட்டுப் புத்தக உலகில் ஒரு புதுமைப் புரட்சி செய்தவர் அவர்.

அவர்தம் 'பவள விழா'வைப் பாரோர் போற்றும் வகையில் கொண்டாடுதற்குத் தமிழகப் பொதுநலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ., அவர்கள் தலைமையில் தகுதிசால் பெரியோர்களைக் கொண்ட விழாக்குழு பணியாற்றி வருகின்றது.

இவ் விழாவில் தமிழக ஆளுநர், தமிழக முதலமைச்சர், பிற அமைச்சர்கள், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், பேராசிரியர்கள், இன்னபிற அறிஞர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டு ஆட்சியாளரின் அருந்தொண்டாற்றலைப் பாராட்டிப் பேசுவர்.

விழா சனிக்கிழமை மாலையில் தொடங்கப்பெறும். ஞாயிறு காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் நடைபெறும். ஆட்சியாளர் அவர்கள் தமிழ்க் காப்பியம், இலக்கணம்,

இலக்கியம், வரலாறு, சமயம் போன்ற பல துறைகட்கு ஆற்றி யுள்ள தொண்டைப்பற்றி அறிஞர்கள் பாராட்டுரை பகர்வர்.

விழாவை யொட்டிப் 'பவள விழா மலர்' வெளியிடப் பெறும். இதன்கண் தமிழ் பயிலும் மேனாட்டு அறிஞர்கள் முதல் தமிழ் கூறு நல்லுலகில் வாழும் புலவர் பெருமக்கள் வரை பலரும் ஆட்சியாளரைப் பற்றி வழங்கியுள்ள பாராட் டுரைகள், கருத்துரைகள் இடம் பெற்றுள்ளன. இந்தியக் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பல மாநிலங் களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், அமைச்சர்கள், உயர் நீதிமன்ற நடுவர்கள், துணை வேந்தர்கள், தமிழ் பயிற்றும் மேனாட்டறிஞர்கள், கல்லூரி முதல்வர்கள், தமிழ்ப் பேராசிரி யர்கள், புலவர் பெருமக்கள் போன்ற பலரும் கருத்துரை வழங்கியுள்ளனர். ஆட்சியாளர்தம் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் இராவ்சாகிப் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்களும் தமிழில் புலவர் இரா. இளங்குமரன் அவர்களும் எழுதியுள்ளனர்.

தொல்காப்பியர் முதல் பாரதிதாசன் வரை தமிழுக்கும் சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றியுள்ள புலவர் பெருமக்கள் பற்றி இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் கவிமாமணிகள் இயற்றியுள்ள கவிதைத் தொகுப்பு 'பாமாலை' என்னும் பகுதியாக அமையும்.

டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் எம். அந்திரனோவ் போன்ற அறிஞர் பெருமக்களின் ஐம்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் மலரில் இடம்பெற்றுள்ளன.

பல்வேறு அறிஞர்களுடனும் அரசியல் பெருமக்களுடனும் ஆட்சியாளர் அமர்ந்துள்ள படங்கள் மலரை அணி செய்யும்.

ஆங்கிலப் பெருமகனாரான டாக்டர் ஜி. யு. போப் மொழி பெயர்த்த 'புறப்பொருள் வெண்பா மாலை' 'புறநானூறு' பாடல் தொகுதிகளின் ஆங்கில ஆக்கம் நூல் வடிவில் விழாவின் நினைவுக் குறியாக வெளியிடப்பெறும்.

தமிழகப் பெருமக்கள் அனைவரும் விழாவிற் கலந்து கொண்டு தாமரைச் செல்வரின் தண்டமிழ்த் தொண்டைப் பாராட்டுவாராக.

தொழில்தந்தை, வள்ளல் திரு நா. மகாலிங்கம் பொதுப்பணி வெள்ளி விழா

தொழில் தந்தை எனப் புகழ்ப் பெறும் வள்ளல் பெருந்தகை பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் அவர்கள் கடந்த இருபத்தைந் தாண்டுகள் ஆற்றிய பொதுப்பணி மாண்பினை இம்மாநிலம் அறியும் வண்ணம் பொதுப்பணி வெள்ளிவிழா இத்திங்கள் 11, 12 ஆம் நாள்களில், பொள்ளாச்சி, மகாத்மாகாந்தி மண்டபத்தில் முறையே திரு தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், பத்மஸ்ரீ திரு ம. ப. பெரிய சாமித்தூரன் ஆகியோர் தலைமையில் மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. முதல்நாள் விழாவில் திரு எம். மெய்யப்பன் அவர்கள் வரவேற் புரை நிகழ்த்தினர். திரு அவநாசி லிங்கம் செட்டியாரவர்கள் தம் தலைமையுரையில் திரு மகாலிங்கம் அவர்களின் பணிச் சிறப்பினை விளக்கிய பின், பேராசிரியர் சு. சீனிவாச ராகவன் அவர்கள் தலைமையில் 'கம்பன் காதையில் ரசங்கள்' என்னும் பொருள் பற்றிய பன்முக உரை நிகழ்ந்தது. புலவர் கீரன் அவர்கள் இந் நிகழ்ச்சியினைத் துவக்கி வைத்தார். தமிழ் அறிஞர் பலர் உரையாற்றினர்.

இரண்டாம் நாள் விழாவில் டாக்டர் எஸ். முருகையன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைவர் பெரியசாமித் தூரன் அவர்கள் திரு மகாலிங்கம் அவர்களின் மாண்பினை விளக்கி உரையாற்றியபின், கவியரங்கம் நடைபெற்றது. 'சக்தி பிறக்குது' என்னும் பொருள் பற்றிக் கவிஞர்கள் எழுவர் கவிதைமழை பொழிந்தனர். முதல்நாள் காந்தர்வ கலாநிதி பத்மஸ்ரீ மங்கலம்பள்ளி பாலமுரளி கிருஷ்ண குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ் விழாவினை யொட்டி மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. இசை, நாட்டிய நாடகம் ஆகியனவும் நடைபெற்றன. திரு மகாலிங்கம் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் பொதுப்பணி யாற்றப் பீடும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ அம்மை அம்பலவாணன் அருள்புரிவானாக.

1970 திசம்பரில் நடைபெற்ற கழகப் பொன்விழாவிலே வரவேற்புரை நிகழ்த்தி விழாவினைச் சிறப்பித்தமையும், 27—3—1972 இல் வள்ளலார் திருவருள் மண்டபத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தமையும் போற்றி மகிழ்தற்குரியன.

டாக்டர் இராதா தியாகராசன் அம்மையார் அவர்களின் பாராட்டு விழா

—கி. கலியாணம் சுந்தரம்

21—6—73 வியாழக்கிழமை மாலே 6 மணி யளவில் மதுரைப் பாண்டியன் உணவு விடுதியின் பசும்புல் முற்றத்தில் உயர் திரு இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையில் டாக்டர் இராதா தியாகராசன் அம்மையார் அவர்கள் மதுரைப் பல்கலேக் கழகத்து டாக்டர் பட்டம் பெற்றதைப் பாராட்டுதற்காக நகரச் செல்வப் பெருமக்கள் சிறப்பு விருந்தொன்று நடத்தினர். அவ்வமயம் ஓய்வுபெற்ற நீதிபதி அரங்கசாமி நாயுடு, குமார ராஜா ராமசாமி செட்டியார், பேராசிரியர் அவ்வை சு. துரைசாமி பிள்ளே, தமிழவேள் பி. டி. ராஜன், சென்னே சௌந்தரம் கைலாசம் அம்மையார், தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் செட்டியார், அழகு சுந்தரம் செட்டியார் முதலிய பல பெரியோர்கள் டாக்டர் இராதா அம்மையாரின் புலமை நலங்களே யும், ஆங்கிலத்திலும் தனித்தமிழிலும் அவருக்கிருக்கும் நா வன்மையையும், அம்மையார் அவர்களின் பக்தி மாண்பை யும் வியந்துரைத்துப் பாராட்டினர்.

சௌந்தரம் அம்மையார் அவர்கள் பட்டம் பெற்றதைப் பாராட்டிப் "பாராட்டு இதழ்" ஒன்றைப் படித்துத் தந்தார்கள். முடிவில் இராதா அம்மையார் தூய இனிய செந்தமிழில் கேட்டவர் மனம் பரவசப்படுமாறு தம்மைப் பாராட்டின பெருமக்க ளுக்கும், தாம் தமிழ்ப் புலமை பெறுதற்குப் பெரிதும் துணையாயும் ஆதரவாயு மிருந்த கருமுத்து குடும்பத்தாருக்கும் தமது மனங் கனிந்த நன்றியைத் தெரிவித்தார்கள். அவர்களின் சொற் பொழிவில் இடையிடையே தோன்றிய மேற்கோள்களேக் கேட்ட அறிஞர்கள் பெரிதும் மகிழ்ந்து திரு இராதா அம்மையாருக்கு இப் பட்டம் மிகவும் பொருத்தமானதென்று தம்மிற் பேசிக் கொண்டதும், அம்மையார் அவர்கள் இத்தகைய புலமை எய்து தற்குத் துணைபுரிந்தபேராசிரியர் அவ்வை சு. துரைசாமி பிள்ளே அவர்களேயும், அம்மையாரது தமிழறிவு பெறும் முயற்சிக்குப் பெரிதும் ஊக்கமூட்டி உயர்த்திய அவர் கணவரான கருமுத்து தியாகராசன் செட்டியாரையும் மிகவும் பெருமைப் படுத்திப் பேசிக் கொண்டதும் இங்கே குறிக்கத் தக்கவையாகும்.

பண்டிதர் கே. ஜே. வேதமுத்து அவர்களின் 75ஆம் ஆண்டு நிறைவு விழா

ஆயிரக்கணக்கான ஐரோப்பியர், அமெரிக்கர், ஆஸ்திரேலியர் ஆகிய அயல் நாட்டவருக்கும், நம் நாட்டிலுள்ள தமிழரல்லாதவரான பலருக்கும் தமிழ்மொழியைக் கற்பித்து அவர்களைத் தமிழில் பேசவும் எழுதவும் உரையாற்றவும் நூல்கள் இயற்றவும், ஏடெழுதவும் ஆற்றல் பெற்றவர்களாகச் செய்பு மனவிற்குக் கடந்த 55 ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற்றி வருபவரான பண்டிதர் கே. ஜே. வேதமுத்து அவர்களின் 75 ஆம் ஆண்டு நிறைவு 11-8 73இல் நடைபெறவிருக்கிறது.

இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர். சிறந்த தமிழ்ப் பற்றுடையவர். சிறுவர் அறிவுக் கதிர் என்னும் திங்கள் இதழை முதன்முதல் துவக்கிச் சிறுவர் உலகு அறிவு வளர்ச்சி பெறத் துணைபுரிந்தவர் இவரே. தமிழ் மரபு நூல், புதுமைப் புதிர், விடுகதைகள், பாடசாலை தினசரி தெய்வப் பொது வணக்கப் பாடல்கள் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். திருவாசகத்தில் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து C. L. S. சங்கத்தார் வெளியிடத் துணைபுரிந்துள்ளார். தமிழ்ப்பாட நூல்கள் சிலவற்றிற்கு உரையும், துணைப்பாட நூல்களும் எழுதியுள்ளார். ஈரோடு தென்னிந்திய கிறித்தவக் கோயிலின் செயலாளராகவும், பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணா, பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார், பெரியார் ஈ. வே. ராமசாமி, ராஜாஜி ஆகிய பெருமக்களோடு தொடர்பு கொண்டவர்.

இத்தகைய பெரியாருக்கு அவர்தம் 75ஆம் ஆண்டு நிறைவினையொட்டி விழா எடுக்கவும், பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கவும், மலர் வெளியிடவும் அன்பர்கள் முயன்று வருகின்றனர். விழாச் சிறப்புறவும், திரு வேதமுத்து அவர்கள் மேலும் பல்லாண்டுகள் நல்வாழ்வு—வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றவும் இறைவன் அருள்புரியுமாறு வாழ்த்துகிறோம்.

செய்திகளும் குறிப்புகளும்

படை திரட்டி வருகிறது இந்தி!

இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் போர் வீரர்களும், அலுவலர்களும் இந்தி மொழியினைப் பயின்று, கல்வித் துறை, படைத் துறை, உடற் பயிற்சி இன்ன பிற துறைகளிலும் அம்மொழியினைப் பயன்படுத்த வேண்டுமாம். அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் 33,000 இந்திச் சொற்கள் அடங்கிய கலைச் சொல்லகராதி யொன்றினை வெளியிடுவதென முடிவு செய்து அதில் ஒரு பகுதி அச்சாகியும் வருகிறதாம். படைத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் இந்தியில் துவக்கத் தேர்வு பெற்றிருக்க வேண்டுமெனவும் கூறப்படுகிறது. மேற் பதவிகட்குச் செல்ல மேலும் பல இந்தி மொழித் தேர்வுகள் எழுதவேண்டுமாம்—இப்படிச் சில ஆணைகளை நடுவண அரசின் பாதுகாப்பு அமைச்சகம் அண்மையில் பிறப்பித்துள்ளது.

ஆம்; ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் ஆங்கிலத்தை இங்ஙனமே எல்லாத் துறைகட்கும் பயன்படுத்தினர். இப்போது நடப்பது இந்திக்காரர்கள் ஆட்சி அல்லவா? எனவே, அனைத்தும் இந்தி மயமாவதில் வியப்பில்லை. ஆனால், உலகைப் போர் மேகம் கவிந்துகொண்டிருக்கும் இந்நாளில் உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலமே பாதுகாப்புத் துறையில் பயன்படுத்தப்படுமாயின் நன்மையே யன்றித் தீமை யேதும் இல்லை. ஆனால், அத் துறையிலும் இந்தியைப் புகுத்துவது மொழி வெறியின்பாற் பட்டதேயன்றி வேறில்லை. இங்ஙனம் எல்லாத் துறைகளிலும் இந்தியை வலிந்து புகுத்திவிட்டுப் பல மொழி பேசப்படும் ஒரு துணைக்கண்டத்தில் ஒருமைப்பாட்டினை எதிர்பார்ப்பதுதான் விந்தையிலும் விந்தை! படைத் துறையிலும் இந்தி புகுத்தப்படுவதைக் காணும்போது,

> "எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி
> எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்"

என்று பாரதிதாசனார் பாடிய பாடல் நினைவுக்கு வருகிறது. ஆம்; இனி இந்தி புகுத்தப்படுகிறது என்று சொல்வதைவிட இந்தி படை திரட்டி வருகிறது எனலே பொருந்தும்!

உலகிலேயே மிகச் சிறிய புத்தகம்!

ஒரு விரல் நகத்தின் அளவே உள்ளதும் உலகிலேயே மிகச் சிறிய புத்தகம் எனக் கருதப்படுவதுமான விந்தையான புத்தகமொன்று நேப்பாளத்தில், அரசினர் இதழ் வைப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தில் ஏழு ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள வேண்டுகோட் பதிகங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளனவாம். இப் புத்தகம் அண்மையில் பிரான்குபாட் என்னுமிடத்தில் நடைபெற்ற அனைத்து நாட்டுப் புத்தகக் காட்சியில் வைக்கப்பட்டிருந்ததாம்.

தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழுவின் 34 ஆவது கூட்டம் 27—5—1973 அன்று திருச்சிராப்பள்ளியில் புலவர் குழுவின் தலைவர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குழுவின் உறுப்பினர்களுள் ஒன்பதின்மரைத் தவிர ஏனையோர் வந்திருந்தனர்.

பின்வரும் முடிவுகள் ஒருமைக் கருத்துடன் நிறைவேற்றப் பெற்றன.

1. புலவர்குழு உறுப்பினர் பண்டித வித்துவான் திரு இரா. நடேச நாயகர் மறைவிற்கு இரங்கல்.

2. பேராசிரியர் சி. நயினூர் முகமது, எம்.ஏ. அவர்கள் திரு நடேச நாயகர் இடத்தில் புலவர்குழு உறுப்பினராதல்.

3. திரு கி. ஆ. பெ. வி. சிவராமன் அவர்கள் புலவர் குழுவின் உடைமைகளையும், நூலகத்தையும் போற்றும் பொறுப்பினராகவும், புலவர் குழுவின் பொருளாளராகவும் தேர்வு பெறல்.

4. புலவர் குழுவின் கட்டடத்திற்குத் 'தமிழகப் புலவர் குழுக் கட்டடம்', என்றும், மன்றத்திற்கு 'மறைமலையடிகள் மன்றம்' என்றும் பெயரிடல்.

5. தமிழ் ஆட்சிமொழியாக விருத்தலின் அரசு ஊழியர்கள் புலவர் பட்டம், இளங்கலைத்தமிழ், முதுகலைத்தமிழ் பெற்றவர்களாயிருப்பின் சிறப்பூதியம் வழங்கல் வேண்டும்.

6. புலவர் வகுப்புப் பயிலும் மாணவர்கட்கு ஆண்டுதோறும் குறைந்தவளவு ரூபா நூறேனும் நூல்கள் பெறுவதற்கு உதவியாக அரசு வழங்குதல் வேண்டும்.

புதுவை மாநில நீதி மன்றங்களில் தமிழ்

புதுவை மாநிலத்தைச் சேர்ந்த காரைக்கால், புதுவை ஆகிய ஊர்களில் உள்ள நீதி மன்றங்களில் சான்று கூறுவோரின் சான்றுரைகள் அனைத்தும் இனித் தமிழிலேயே பதிவு செய்யப்படல் வேண்டும் என்ற ஓர் ஆணையைப் புதுவை மாநில ஆளுநர் அண்மையில் பிறப்பித்துள்ள தமிழக வரசும் பின்பற்றுமாக.

இசுலாமிய இலக்கியங்கள் தமிழில் வரவேண்டும்

"தமிழில் வெளிவர வேண்டிய நூற்றுக்கணக்கான இசுலாமிய இலக்கியங்கள் இன்னும் வெளிப்படாமல் மறைந்து கிடக்கின்றன. அத்தகைய அரிய இலக்கியங்களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டிய இன்றியமையாத பொறுப்பு தமிழ் அறிஞர்களைச் சார்ந்த

தாகும். சென்னைப் பல்கலைக் கழகமும் இப் பணியில் ஈடுபடல் வேண்டும். இப் பணிக்கு அரசு எல்லா உதவிகளையும் செய்யும்'' என்று 13—5—73 இல் திருச்சியில் நடைபெற்ற இசுலாமிய - தமிழ் இலக்கிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ஜெ. சாதிக்பாட்சா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அமைச்சர் அவர்களின் இக்கருத்து வரவேற்க வேண்டிய ஒரு சிறந்த கருத்தாகும். தமிழில் எங்ஙனம் ஆங்கில இலக்கியங்கள் இடம் பெறுகின்றனவோ, அங்ஙனமே பிறமொழி - சமய இலக்கியங்களும் இடம் பெறுதல் வேண்டும். அப்போதுதான் பாரதியார் கூறியதுபோல் தமிழ்மொழி உலகெலாம் பரவும் வகை காணமுடியும்.

சோழர் வரலாறு – கருத்தரங்கம்

கடந்த 2—6—73, 3—6—73 ஆகிய நாள்களில் தொல்பொருள் ஆய்வுத்துறைச் சார்பில் சோழர் வரலாறு பற்றிய கருத்தரங்கும் கவியரங்கும் நடைபெற்றன.

கல்வெட்டுக் கலைப்பயிற்சி நிறைவு விழா

3—6—73 இல் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையின் சார்பில், சென்னை மயிலை மந்தைவெளியில் கல்வெட்டுக் கலைப்பயிற்சி விழா நடைபெற்றது. விழாவிற்குச் சுற்றுலா அமைச்சர் மாண்புமிகு கே. இராசாராம் அவர்கள் தலைமை தாங்கினார். கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கல்வெட்டுத் துறையில் பயிற்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்களை வழங்கினார். திரு க. அறிவழகன், எம்.ஏ., எம்.எல்.சி. அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

குன்றத்தூர் சேக்கிழார் கழக முப்பத்திரண்டாம் ஆண்டுவிழா

குன்றத்தூர் சேக்கிழார் கழகத்தின் முப்பத்திரண்டாம் ஆண்டு விழா, கடந்த மேத் திங்கள் 26 ஆம் நாள் துவங்கி இத் திங்கள் 4 ஆம் நாள் (4—6—73 முடியக் குன்றத்தூரில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. 3—6—73 இல் உயர்திரு பி. சாந்தலிங்கம் அவர்கட்குப் பாராட்டும், சைவசித்தாந்த மகாசமாசத்தின் சைவ சமயப் பரப்புச் சொற்பொழிவும் நடைபெற்றன. இவ் விழாவிற்குத் தனித்தமிழ்க் காவலர் திரு கீ. இராமலிங்கனார் அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழ்ப் பேரகராதி, தமிழ்க்கலைக் களஞ்சியம் இவ் விரண்டிற்கும் நிலையான பதிப்பாசிரியர் குழுக்களைத் தமிழகவரசு அமைக்க வேண்டுவது முதன்மையான பணியாகும்.

இசைத்தட்டில் கழக மலர் வழிபாடுகள்

இசைப் பெருமாட்டி சீதாமணி சீனிவாசன் இசையமைத்துப் பாடிய **'பிள்ளையார் வழிபாடு'** இசைத்தட்டில் வெளிவந்துவிட்டது. அதன் விலை ரூ. 14- ஆகும். இசைப் பெருமாட்டி சேலம் செயலட்சுமி அம்மை இசையமைத்துப் பாடிய **'உமையம்மை வழிபாடு'** 7—6—73 இல் இசைத் தட்டில் பதிவு செய்யப் பெற்றது. இசைத்தட்டு விற்பனைக்குவர 3 திங்களாகும். முருகர் வழிபாடும் விரைவிலே பதிவு செய்யப் பெறும்.

திரு கே. பி. சுந்தரம், மாநகர நூலக ஆணைக்குழுத் தலைவர்

சிறந்த எழுத்தாளரும், தையற்கலை வல்லுநரும், 'தையற் கலை' ஆசிரியருமான திரு கே. பி. சுந்தரம் அவர்கள் சென்னை மாநகர நூலக ஆணைக்குழுவின் தலைவராக 5—7—73 இல் ஒருமனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அன்னாருக்கு எம் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மலையாள மொழியில் நீதிமன்றத் தீர்ப்பு

கோழிக் கோட்டிலுள்ள படகாரா என்னும் இடத்தில் கடந்த 27—6—73 இல் சமூகத்துறை வழக்கொன்றில் (Civil Case) தீர்ப்புக் கூறிய நடுவர் அனந்த சுப்பிரமணியம் அவர்கள் நாலரைப் பக்க அளவில் மலையாளத்தில் எழுதப்பட்ட தமது தீர்ப்பினைப் படித்தார். மாநில மொழியில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். மலையாள நடுவரின் மொழிப்பற்றினைப் பாராட்டுகிறோம். தமிழகமும் இத் துறையில் மலையாளத்தைப் பின்பற்றுமாக.

"வைணவம்" சிறப்புச் சொற்பொழிவு

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரிச் சார்பில் கோடை விடுமுறைக்குப் பின், நாளிது 14—7—73 சனிக்கிழமை மாலை 6-15 மணிக்கு, கல்லூரிப் பணிமனையில் (கே. இராமய்ய செட்டியார் ஏ. ஆர். சி. மகளிர் பள்ளி, 44, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-1) "வைணவம்" சிறப்புச் சொற்பொழிவு திரு தெ. ஞானசுந்தரம், எம். ஏ., (கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை) அவர்கள் நிகழ்த்தினர்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் மறைவு

தமிழிசை வல்லுநரும் இசையரசு, இசைப் பேரறிஞர் என்னும் பட்டங்கள் பெற்றவருமான திரு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் தமது 65 ஆம் அகவையில் மூச்சடைப்பால் கடந்த 28-6-73 இல் காலமானார்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். இசையரசின் குடும்பத்தார்க்கும், இசையுலக அன்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். திரு. தேசிகர் அவர்கள் வாழ்க்கை வரலாறு அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.